

Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 17 2024

வியாழக்கிழமை ஒக்டோபர் 17, 2024 | ஒளி: 10 கதிர் 073 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

**உங்களுக்கு நீங்களே தீபங்களாக யிருங்கள்,**
**உங்களுக்கு நீங்களே புகலிடமாயிருங்கள்.**
**வெளியில் எத்தகைய புகலிடத்தையும் நாடாதீர்கள் (தர்மபோதனை)**




# “நாட்டின் தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை”

நாங்கள் யுத்தத்தின் தாக்கத்தைப் கண்டுள்ளோம், மேலும் அமைதியின் குணப்படுத்தும் சக்தியையும் அனுபவித்திருக்கிறோம். உங்கள் பயணத்தின் அடுத்த கட்டத்திற்கு நீங்கள் அடியெடுத்து வைக்கும் தருணம், நமது தேசம் கடந்த காலங்களில் கற்றுக்கொண்ட பாடங்களை உங்களுடன் எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனபாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா (ஓய்வு) தெரிவித்தார்.

அதேபோன்று, சமாதானம், ஸ்திரத்தன்மை மற்றும் ஒத்துழைப்பின் பெறுமதியை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (KDU) பொது பட்டமளிப்பு விழா நேற்று மாலை (அக்டோபர் 15)பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது. இதன் இறுதி அமர்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## அம்புலுவாவ கேபிள் கார்: நீதிமன்றம் அறிவுறுத்தல்

தனியார் நிறுவனம் ஒன்றினால் முன்னெடுக்கப்படும் அம்புலுவாவ கேபிள் கார் திட்டத்தில் தேவையற்ற வகையில் தலையிடவோ அல்லது இடைநிறுத்தவோ கூடாது என்று கம்பளை உடபலத்த பிரதேச செயலாளருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் புதன்கிழமை (16) இடைக்கால தடை விதித்துள்ளது.

## அர்ஜூன் அலோசியஸூக்கு மீண்டும் பிணை நிராகரிப்பு


டபிள்யூ.எம். மெண்டிஸ் மற்றும் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர்களான அர்ஜூன் அலோசியஸ் மற்றும் ஏ.ஆர். தினேந்திர ஜான்.

ஆகிய இருவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் மீண்டும் புதன்கிழமை (16) நிராகரித்துள்ளது.

ஒக்டோபர் 14 அன்று, நிலுவையில் உள்ள மேல்முறையீட்டில், எதிர்மனுதாரர்களுக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய 3.5 பில்லியன் ரூபாய் பெறுமதி சேர் வரியை (வற்) செலுத்த தவறியதற்காக, மூன்று பணிப்பாளர்களுக்கும் ஆறு மாத சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.





## “ராஜபக்ஷக்கள் தற்காலிகமாக விலகியுள்ளனர்”

அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தயாராக இல்லை என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ராஜபக்ஷக்கள் தற்காலிக விலகல் ஒன்றையே மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே மஹிந்த ராஜபக்ஷஇவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், பொதுஜன பெரமுனவின் வெற்றி மிக எளிதாக உள்ளது. தான் தற்காலிக ஓய்வு எடுத்துள்ளதாகவும் அரசியல்வாதி ஓய்வு பெறுவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### இரணவில் ஹோட்டலில்

## வெளிநாட்டு பிரஜைகள் 10 பேர் சிக்கினர்

புத்தளம், சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரணவில் பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் 10 பேர் செவ்வாய்க்கிழமை (15) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என புத்தளம் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## வெள்ளி முதல் ரூ.3,000 பெறலாம்



அனைத்து ஓய்வூதி யதாரர்களின் கணக்குகளிலும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவு 3,000 ரூபாய் புதன்கிழமை (16) வைப்புச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அறிவித்துள்ள ஓய்வூதிய திணைக்களம், அந்த தொகையை வெள்ளிக்கிழமை (18) முதல் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவித்துள்ளது.

ஓய்வூதியதாரர்களுக்கான உத்தேச மாதாந்த இடைக்கால கொடுப்பனவான 3,000 ரூபாய் வழங்கப்படாமை தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க,

தொடர்ச்சி P2

## மன்னார் புதைக்குழிகள்: விசேட கட்டளை பிறப்பிப்பு

எஸ்.ஆர்.லெம்பேட்



மன்னார்- திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி மற்றும் மன்னார் நகர பகுதியில் காணப்படும் மன்னார் சதோச மனித புதைகுழி ஆகிய மனித புதைகுழிகள் இரண்டு தொடர்பான விசாரணைகளும்

தொடர்ச்சி P2

## “எம்மையும் தூக்கி போடாமல் இருந்தால் சரி”




எஸ். சதீஸ்

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அரசாங்கம் அமைக்கும் போது அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து கட்சிகளும் இல்லாமல் போய்விட்டன. நாட்டை மீட்டெடுத்த முன்னாள் ஜனாதிபதி ரணிலை மக்கள் தூக்கி வீசி விட்டார்கள், அதேபோல் எம்மையும் தூக்கி போடாமல் இருந்தால் சரி என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் சலுகைகளை வழங்கிய புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எவ்வித சலுகைகளையும் ஏன்? வழங்கவில்லை என்றும் கேள்வியெழுப்பிய அவர்,

தொடர்ச்சி P2

## “எவர் வெளியேறினாலும் பறவாயில்லை”



திருகோணமலை மாவட்டத்தில், நான்கு வருடங்களாக தீர்க்கப்படாதுள்ள பிரச்சிச்சினைகளுக்கு தீர்வுகாணும் களப்பணிகளைச் சிறப்புடன் செய்யும் வேட்பாளர் டொக்டர் ஹில்மி மொஹமட். எனவே, இம்முறை தேர்தலில் அமோக ஆதரவுடன் அவரை வெற்றிபெறச் செய்ய வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், ஐக்கிய மக்கள் கூட்டணியில், திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் டொக்டர் ஹில்மி மஹ்ரூபை ஆதரித்து, கிண்ணியாவில் செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# “நாட்டின் தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை”

இந்த பொது பட்டமளிப்பின் போது இம்முறை 1,728 மாணவர்களுக்கு பட்டமளிக்கப்பட்டது. இதில் பல்கலைக்கழகத்தின் இளங்கலை, முதுகலை மற்றும் PhD துறைகளில் பட்டம் பெற்ற, மற்றும் தேசிய பாதுகாப்பு கல்லூரி, பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி, இலங்கை இராணுவ அகடமி, இராணுவ வழங்கள் முகாமைத்துவ கல்லூரி, கடற்படை, கடல்சார் கல்லூரி மற்றும் இலங்கை விமானப்படை அகடமி ஆகியவற்றின் மாணவர்களும் அடங்குவர்.

நிகழ்வுக்கு வருகை தந்த கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபை தலைவரும் பாதுகாப்புச் செயலாளலருமான எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தாவை (ஓய்வு) பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஜெனரல் சாந்த கோட்டேகொட (ஓய்வு), மற்றும் உபவேந்தர் (VC), ரியர் அட்மிரல் தம்மிக்க குமார ஆகியோர் வரவேற்றனர்.

1981 இல் முப்படை அதிகாரிகளின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கொத்தலாவல பாதுகாப்பு நிறுவனம் முதலில் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் 2009இல் இது ஒரு முழுமையான பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டதுடன் வெளி மாணவர்களுக்கும் இங்கு கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. தற்போது, சர்வதேச மாணவர்களும் இங்கு பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் பொதுநலவாய பல்கலைக்கழகங்களின் சங்கம் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களின் சங்கத்தின் உறுப்பினர் அங்கத்துவத்தையும் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், பல்கலைக்கழக உபவேந்தர்கள், வெளிநாட்டு இராஜதந்திகள்,கொத்தலாவல பல்கலைக்கழகநிர்வாக சபை உறுப்பினர்கள், சிரேஷ்ட முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பல்கலைக்கழககல்வி, இராணுவ மற்றும் நிர்வாக ஊழியர்கள், பட்டதாரிகளின் குடும்ப உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# அம்புலுவாவ கேபிள் கார்: நீதிமன்றம் அறிவுறுத்தல்

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியசர்களான எம்.லாஃபர் மற்றும் பி.குமாரரத்தினம் ஆகிய இருவர் அடங்கிய பெஞ்ச், இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. இந்த இடைக்கால உத்தரவு ஒக்டோபர் 29 ஆம் திகதி வரை அமலில் இருக்கும்.

எம்.டி. அம்பர் அட்வென்ச்சர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் தாக்கல் செய்த ரிட் மனுவுக்கு இணங்கவே இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 1,621.5 மீட்டர் ரோப்வேயுடன் கூடிய கேபிள் கார் திட்டத்தை உருவாக்க, இயக்க மற்றும் மாற்றுவதற்கான மனுதாரரின் திட்டத்திற்கு பிரதேச செயலாளரின் சட்டவிரோதமான முறையில் தலையீடு செய்கிறார். இது தங்களுடைய சேவையை முன்னெடுப்பதற்கு தடையாக உள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் அறிவுறுத்தலின் பேரில் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் ஷெஹானி அல்விஸ் மற்றும் நமிக் நஃபத் ஆகியோர் மனுதாரர் சார்பில் ஆஜராகினர்.

# வெள்ளி முதல் ரூ.3,000 பெறலாம்



அதற்கான பணத்தை திறைசேரியிலிருந்து வழங்குமாறு அண்மையில் பணிப்புரை விடுத்தார்.

அந்த அறிவுறுத்தலின்படி, திறைசேரியிலிருந்து தேவையான பணம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதோடு, அதனை புதன்கிழமை (16) முதல் ஓய்வூதியதாரர்களின் கணக்கில் வைப்பிலிட ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக ரூ.3000 வழங்க 24/08/2024 திகதியிட்ட 02/2024 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, 679,960 ஓய்வூதியதாரர்களுக்கு இந்த மாதத்திற்கான 2,021 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது.

அதன்படி, இந்தக் கொடுப்பனவை புதன்கிழமை (16) முதல் வழங்க ஓய்வூதியத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

அரச மற்றும் தனியார் வங்கிகளில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்கில் இன்று பணம் வைப்பிலிட ப்பட்டுள்ளதுடன், தபால் நிலையங்கள் மற்றும் உப அலுவலகங்களில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் இந்தக் கொடுப்பனவை (18) முதல் பெற்றுக்கொள்ள முடியும்.

# “ராஜபக்ஷக்கள் தற்காலிகமாக விலகியுள்ளனர்”

ராஜபக்ஷக்கள் தேர்தலில் போட்டியிடவில்லை என்று சமூகக் கருத்து உருவாகியுள்ளது என எழுப்பப்பட்ட கேள்விக்கு ஷசீந்திர ராஜபக்ஷ மொனராகலை மாவட்டத்தில் போட்டியிடுகிறார் என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொதுஜன பெரமுன கட்சி 113 ஆசனங்களை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# மன்னார் புதைக்குழிகள்...

மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக புதன்கிழமை(16) எடுத்துக் கொள்ளப்பட்டதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பாக மன்றில் முன்னிலையாகிய சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் தெரிவித்தார். குறித்த வழக்கு விசாரணைகள் குறித்து அவர் மேலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,,,

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வைத்தியர் வி.எல். வைத்திய ரெட்ண ,சி.ஐ.டி. உத்தியோகத்தர்களு ம்,காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாக சட்டத்தரணிகளும்,அரச சட்டத்தரணிகளும் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

இதன் போது ஏற்கனவே மனித எச்சங்களில் இருந்து பகுப்பாய்விற்கு பிரித்து எடுக்கப்பட்ட மாதிரிகள் நீதிமன்ற கட்டுக் காவலில் இருப்பதாகவும்,அதனை சீ-14 பரிசோதனைக்காக புலோரிடா விற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைக ளுக்காக வைத்தியரினால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள நீதிமன்றத்தினால் கட்டளை ஆக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வைத்தியர் ‘கே’ வகையினால் ஏற்கனவே எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகளுக்கான அறிக்கை புதன்கிழமை (16) மன்றில் சமர்ப்பிக்கப்பட இருந்தது.எனினும் அவர் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காத காரணத்தினால் குறித்த அறிக்கையை எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி தாக்கல் செய்வதாக தவணை எடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் குறித்த அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படும். அத்தோடு குறித்த மாதிரிகள் சீ-14 பரிசோதனைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் அன்றைய தினம் அறிவிக்கப்படும்.இந்த நிலையில் குறித்த திருக்கேதீஸ்வர மனித புதைகுழி வழக்கு மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி திகதி அழைக்கப்பட உள்ளது.

### மன்னார் சதொச மனித புதைகுழி தொடர்பான விசாரணை

மன்னார் சதொச மனித புதைகுழி தொடர்பான வழக்கு இந்த மாதம் 7 ஆம் திகதியில் இருந்து 11 ஆம் திகதி வரை வைத்தியர் ராஜபக்ஷ குழுவினராலும்,ராஜ் சோமதேவ குழுவினராலும் ஏற்கனவே ஏற்கனவே மனித புதைகுழியில் இருந்து அகழ்வு செய்யப்பட்டு பொதி பொதி செய்யப்பட்டு நீதிமன்ற கட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள பொதிகளில் இருந்து மனித எலும்புக் கூட்டுத் தொகுதி தனியாகவும், அதனுடன் எடுக்கப்பட்ட பிற பொருட்கள் தனியாகவும் குறித்த 5 நாட்கள் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பிரித்து எடுக்கப்பட்டு,பொதி செய்யப்பட்டன.

பிர பொருட்கள் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினராலும்,மனித எலும்புகள் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினராலும் பிரித்து எடுக்கப்பட்டு பொதி செய்யப்பட்டது. வைத்தியர் ராஜ் சோமதேவ அவர்களினால் சதோச மனித புதை குழியை சுற்றி நான்கு இடங்களில் பரீட்சார்த்தமாக தோண்டிப் பார்த்து ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு பொதி செய்யப்பட்டு நீதிமன்ற கட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த குறித்த பொதிகள் தொடர்பான விசாரணை இன்று புதன்கிழமை(16) மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது அரச சட்டத்தரணிகள்,காணமல் போனர் அலுவலக உத் தியோகத்தர்கள்,பாதிக்க ப்பட்டவர்கள் சார்பாக மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் ஆகியோர் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

# “எம்மையும் தூக்கி போடாமல் இருந்தால் சரி”

வாக்குகளுக்காக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்பில், ஒரு தவறான வதந்திகளை பரப்பாது. வேலைத்திட்டங்களை முன்னெடுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

நோர்வூட் நிவ் வெளிகம பகுதியில் இடம்பெற்ற புதன்கிழமை (16) முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில்:

பெருந்தோட்ட தொழிலாளர்களுடைய சம்பள விடயத்தில் 1,350 ரூபாய் அடிப்படை சம்பளமும் மேலதிக கொடுப்பனவு 350ரூபாவை அதிகரிக்குமாறு சம்பள நிர்ணய சபையில் நாங்கள் கோரிக்கையை முன்வைத்த போது அதை நிராகரித்தது தற்போதைய ஜனாதிபதியின் தொழிற்சங்கமாகும்.

விமர்சனங்கள் பல இருந்தாலும் நான்கு வருடங்களாக மக்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தேன். அதேபோல் மக்களின் பிரச்சினைகளுக்கு களத்தில் இறங்கி குரல் கொடுத்திருக்கின்றேன். எந்த இடத்திலும்




நான் ஓடி ஒழியவில்லை. நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை 30 சுயேட்சை குழுக்கள் கட்சிகள் உருவாகியுள்ளன. எந்த கட்சியாக இருந்தாலும் தமிழ் பிரதி நிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தனக்கு கிடைத்த வளங்களை வைத்து மாத்திரம் வேலை செய்ய முடியுமே தவிர வளங்களை உருவாக்க முடியாது. நாடு வங்குரோத்து அடைந்த போது கூட மலையகத்தை பொறுத்தவரையில் இரண்டு சம்பள உயர்வுகளை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்றார்.

# வெளிநாட்டு...

புத்தளம் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலேசியப் பிரஜைகள் நால்வரும், பெண்ணொருவர் உட்பட எத்தியோப்பிய பிரஜைகள் நால்வரும், கென்யா நாட்டுப் பெண்ணும் , சீனப் பிரஜை ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 20 கணினிகளும், 282 கையடக்கத் தொலைபேசிகளும், 03 ரவ்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# “எவர் வெளியேறினாலும் பறவாயில்லை”

“ஜனாதிபதி தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு நாங்கள் தீர்மானித்தோம். அந்தத் தேர்தலில் சுமார் 95,000 வாக்குகளை சஜித்துக்குப் பெற்றுக்கொடுத்தோம். ஆனால், எமது தீர்மானத்துக்கு உடன்பட முடியாது எனக் கூறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப், அமைதியாக இருக்கப்போவதாகத் தெரிவித்தார்.

பின்னர், ரணிலின் தந்திரத்துக்குப் பலியாகி எமது கட்சியிலிருந்து தூரமாகிவிட்டார். அப்துல்லாஹ் மஹ்ரூப் கட்சியின் வளர்ச்சிக்காக கடந்த காலங்களில் செய்த பணிகளுக்கு நன்றி கூறுகிறோம். 2010 மற்றும் 2015 தேர்தல்களில், அவரை வேட்பாளராக நிறுத்தி வெல்ல வைத்ததும் எமது கட்சியே. இதற்காக இம்மாவட்டத்தைச் சேர்ந்த பலர் உழைத்தனர். இப்போது அப்துல்லாஹ் மஹ்ரூப் எங்களுடன் இல்லை. எவர் வெளியேறினாலும் பறவாயில்லை. திறமையானவர்களை களத்துக்கு கொண்டுவந்து, கட்சியை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்வதே எமது இலக்காக இருக்கும்.

அந்தவகையில், டொக்டர் ஹில்மி மஹ்ரூபை பாராளுமன்றத் தேர்தலில் நிறுத்தியுள்ளோம். நகர சபை தவிசாளராக இருந்த இவரிடம் நிறைய அனுபவங்கள் உள்ளன. சிறந்த கல்விமானாகவும் ஒழுக்கசீலராகவும் இவரை நாம் பார்க்கிறோம். இறைவன் நாடினால் அவரது வெற்றி உறுதியாகும்.

புல்மோட்டை முதல் தோப்பூர் வரை அவருக்கு ஆதரவு இருக்கிறது. இம்மாவட்டத்தின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி உழைப்பதற்கு, டொக்டர் ஹில்மி மஹ்ரூபை வெற்றியடையச் செய்ய வேண்டும்” என்று தெரிவித்தார்.

# ஔடத உற்பத்தியில் முதலீட கியூபா கரிசனை



இலங்கையின் ஔடத உற்பத்தியில் கியூபா அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கைக்கான கியூபா தூதுவர் அன்த்ரேஸ் மாசெர்லோ கொன்சாலெஸ் கொரிடோ தெரிவித்துள்ளார்.

பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவிற்கு கியூபா அரசாங்கத்தின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு பிரதமர் அலுவலகத்தில் புதன்கிழமை (15) மாலை இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே தூதுவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் கியூபாவுக்கிடையில் காணப்படும் 65 வருடங்களைக் கடந்த நீண்டகால இராஜதந்திர தொடர்புகளை மேலும் வலுப்படுத்தி, கியூபாவின் உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டுள்ள நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டத்தை மீள ஆரம்பித்தல், இலங்கையின் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கென வைத்திய, விளையாட்டுக் கல்வி தொடர்பான புலமைப்பரிசில் வழங்கல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கடந்த பல வருடங்களாக கியூபா முகம்கொடுத்த பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், கியூபா தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்ட பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய, கியூபா பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்ற உத்தியோகபூர்வ அழைப்பையும் விடுத்தார்.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்த்ரி, பிரதமரின் மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன உள்ளிட்ட அதிகாரிகளும், கியூபா அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அதிகாரிகள் சிலரும் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

## உலகில் இரண்டாம் இடத்திற்கு 'எல்ல சில்'



உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளின் விருப்பங்களின்படி, பயண வழிகாட்டி இணையதளம், சிறந்த உணவகங்களில் சிறந்தது (BEST OF THE BEST RESTAURANTS) என்ற பெயரில் நடாத்திய கருத்துக்கணிப்பில், 'எல்ல சில்' உணவகம் உலகின் சிறந்த உணவகங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இதற்கு முன்னதாகவும் சில் உணவகம் தெற்காசியாவின் இரண்டாவது சிறந்த உணவகமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

உணவு, பானங்கள் மற்றும் கவனிப்பு சேவைகள் உள்ளிட்ட பல துறைகள், தங்கள் விருப்பத்திற்கு காரணம் என்று சுற்றுலாப் பயணிகளின் குறிப்புகளில் காணப்பட்டுள்ளது.

## இலஞ்சம் பெற்ற பிரதி ஆணையாளர் கைது

எம்.எஸ்.எம்.நூர்தீன்

இரண்டு இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்ற கிழக்கு மாகாண இறைவரி திணைக்கள பிரதி ஆணையாளர் ஒருவரை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை(15)கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு - சத்துருக்கொண்டான் பகுதியில் 65 பேர்ச் காணியை ஒரு கோடி ரூபாவுக்கு கொள்வனவு செய்து 6 இலட்சம் ரூபாய் முத்திரைத் தொகை செலுத்தியதன் பின்னர், அதன் மதிப்பீட்டுப் பெறுமதி இரண்டு கோடியே 65 இலட்சம் ரூபாய் என மாகாண இறைவரித் திணைக்களம் மீண்டும் அறிவித்துள்ளது.

அதன்படி, அபராதக் கட்டணத்துடன் அரசாங்கக் கட்டணமாக 850,000 ரூபாய் செலுத்தப்பட வேண்டும் எனவும், இந்த தொகையை இரண்டு இலட்சம் ரூபாய் வரையில் குறைப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபாய் இலஞ்சம் கோரபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பணம் மட்டக்களப்பில் உள்ள கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தில் வைத்து பெற்றுக் கொள்ளும் போது மேற்படி பிரதி ஆணையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கண் வைத்திய முகாம்





கண் வைத்திய முகாமொன்று டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையில் புதன்கிழமை (16) இடம்பெற்றது.

மத்திய மாகாண ஆளுநரின் பணிப்புரைகமைய மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் இணைந்து முகாமை இலவசமாக ஏற்பாடு செய்திருந்தன.

மேலும், மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

## இராணுவத்தால் வீடுகள் கையளிப்பு









யது பாஸ்கரன்

கிளிநொச்சி, பரந்தன் மற்றும் பன்னங்கண்டி ஆகிய பகுதகளில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இரு வீடுகள் அதன் பயணாளிகளிடம் இன்று (16) கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரந்தன் -சிவபுரம் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த 05 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு நிர்மாணிக்கப்பட்ட வீடு அதன் உரிமையாளரிடம் இன்று (16) கையளிக்கப்பட்டது

அதனை தொடர்ந்து கரைச்சி, பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பன்னங்கண்டி கிராமத்தில் இராணுவத்தில் பணியாற்றும் கணவன்-மனைவி மற்றும் அவர்களுடன் சேர்ந்து வாழும் மாற்றுத்திறனாளியான தாய்? தந்தையரை உள்ளடக்கிய குடும்பத்துக்கு குறித்த வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளது

குறித்த நிகழ்வுகளில் இராணுவ உயரதிகாரிகள், இராணுவ பதவி நிலை உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொதுமக்கள் மற்றும் வீட்டின் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## யாழில் பணம் மோசடி இளைஞனுக்கு விளக்கமறியல்

வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரிடம் 80 லட்சம் ரூபாய் பணத்தைப் பெற்று மோசடி செய்த நபர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அந்த இளைஞரிடம் பணத்தை பெற்றுக்கொண்ட பின்னரும் வெளிநாட்டுக்கு அனுப்பாத காரணத்தால், அவர் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளில் ஈடுபட்ட பொலிஸார் பணம் பெற்றுக்கொண்டவரை கைது செய்து, விசாரணைகளின் பின்னர், செவ்வாய்க்கிழமை (15) ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது, சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## ரயில் தடம்புரண்டது



நாவலப்பிட்டியில் இருந்து நானுஓயா நோக்கி பயணித்த ரயில், தலவாக்கலை- வட்டகொட ரயில் நிலையங்களுக்கு இடையில் செவ்வாய்க்கிழமை (15) மாலை தடம் புரண்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில் கட்டுப்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக செவ்வாய்க்கிழமை (15) இரவு பதுளை மற்றும் கொழும்பு கோட்டையில் இருந்து பயணிக்கும் தபால் ரயில்கள் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் தாமதமாகச் சென்றதாக நாவலப்பிட்டிய ரயில் கட்டுப்பாட்டு அறையின் பேச்சாளர் தெரிவித்தார்.

## சிகரெட்டுகளுடன் இருவர் கைது

நீர்கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கார் ஒன்றை செவ்வாய்க்கிழமை (15) மாலை கேகாலை பொலிஸார் சோதனையிட்ட போது அதிலிருந்து 174 சிகரெட் பெக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த 68 மற்றும் 29 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

## காத்தான்குடி மாணவிக்கு அமோக வரவேற்பு




எம்.எஸ்.எம். நூர்தீன்

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப் பொருளுக்கு எதிராக கடந்த திங்கட்கிழமை (7) முதல்

மேற்கொண்ட துவிச்சக்கர வண்டி பயணத்தை நிறைவு செய்த காத்தான்குடி பத்ரியா வித்தியாலயத்தில் 10ம் தரத்தில் கல்வி கற்கும் பாத்திமா நதா, செவ்வாய்க்கிழமை (16) காத்தான்குடிக்கு திரும்பினார்.

காத்தான்குடி பிரதான வீதி வடக்கு எல்லையில் உள்ள நுழைவாயிலில் வைத்து மாணவியை, குடும்ப உறவினர்கள் கண்ணீர் மல்க மாலை அணிந்து வரவேற்றதுடன் சமூக செயற்பாட்டாளர்கள் மாணவியை கௌரவித்தனர்.

குறித்த மாணவி காத்தான்குடியில் இருந்து கொழும்புக்கு துவிச்சக்கர வண்டியிலேயே சென்று, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப் பொருளுக்கு எதிரான தனது மகஜரை ஜனாதிபதி செயலக அதிகாரியிடம் வெள்ளிக்கிழமையும் (11) பிரதமர் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவிடம் திங்கட்கிழமை (14) கையளித்தார்.

# போதுமான உணவை மட்டுமே எடுத்துகொள்வது சிறந்தது

ஒரு சராசரி இலங்கையர் தனது உணவுக்காக வருடத்திற்கு சுமார் ஆறு இலட்சம் ரூபாவைச் செலவிடுகிறார். தினசரி உணவுச் செலவை ஆயிரத்து ஐநூறு ரூபாய் என்ற வரம்பிற்குள் வைத்து இந்த வகைக் கணக்கீடு செய்யலாம். ஒரு வீட்டில் சமைத்து சுத்தம் செய்யும் போது, இந்த அளவு மிகவும் குறைகிறது. எனவே, நான்கு பேர் கொண்ட குடும்பத்தின் உணவுச் செலவு ஆண்டுக்கு பத்து லட்சமாக இருக்கும்.

உலக உணவு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 16ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. எனினும், உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுக்கொண்டேதான் இருக்கின்றது. உலக மக்கள் தொகையில் ஏழு மில்லியனுக்கும் அதிகமானோர் தினசரி பட்டினியில் வாழ்கின்றனர் என்று உலக உணவுத் திட்டம் கூறுகிறது. வயிற்றில் எதையும் வைக்க முடியாத வகையைப் பற்றி இது பேசுகிறது.

2023 ஆம் ஆண்டில், உலக மக்கள்தொகையில் 345 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கடுமையான உணவு நெருக்கடி அல்லது சாப்பிட எதுவும் இல்லாதவர்களாக மாறியுள்ளனர்.

வாழ்நாளில் கேக்கைப் பார்த்திராத ஹைட்டியர்கள், களிமண் கேக் சாப்பிடுகிறார்கள். பெண்கள் குழுவாக மைல் தூரம் மலைகள் வழியாகச் சென்று நல்ல களிமண்ணை வீட்டிற்கு கொண்டு வருவார்கள். பின்னர் இங்கு உப்பு மற்றும் தண்ணீர் சேர்க்கப்படுகிறது. அவை வெயிலில் உலர்த்தப்படுகின்றன. இப்போது களிமண் வடிவத்தில் ரொட்டி போல் தெரிகிறது. ஹைட்டியில் உள்ள பெஹோடெனாவின் மூன்றுவேளை உணவுகள் இந்த உணவோடு முடிவடைகின்றன.

களிமண் கேக் இந்த மாகாணத்தின் பாரம்பரிய உணவாகும். கர்ப்பிணித் தாய்மார்கள் பசியால் அவதிப்படுவதால், அவர்களின் உடலில் உள்ள தீயை அணைக்க இவ்வாறு களிமண் ரொட்டியை சாப்பிட வழங்கப்பட்டது. அது உண்மையில் ஒரு மருந்தாக இருந்தது. இது இப்போது ஹைட்டியின் உணவாக மாறிவிட்டது.

அண்மைக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட உணவு நெருக்கடியானது பொருளாதார நெருக்கடியால் பாரியளவிலான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. உணவுப் பணவீக்கம் கட்டுப்படியாகாத நிலையை அடைந்து, சம்பாதித்த அனைத்தையும் உணவுக்கே செலவிடும் நிலையில் உள்ளோம். 2022 ஆம் ஆண்டின் அறிக்கைகளின்படி, லெபனான் உலகிலேயே அதிக உணவுப் பணவீக்கத்தைக் கொண்டிருந்தது. இந்தப் பட்டியலில் இலங்கை ஐந்தாவது இடத்தில் இருந்தது.

2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இலங்கையின் உணவுப் பணவீக்கம் 60% ஆக இருந்தது. அதாவது நமது வருமானத்தில் அறுபது சதவீதம் உணவு மற்றும் பானத்திற்காக செலவிடப்படுகிறது.

இந்த தொகைக்கு பதிலாக நாம் சம்பாதிக்கும் பணம் உணவு மற்றும் பானத்திற்கு செலவழிக்க போதுமானதாக இருந்தால் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம். இப்படி நாம் உணவுப் பிரச்சினையில் தவிக்கும் போது சிலரது உணவுக்கு வரி விதிக்கப்படுகிறது.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# ‘’தோல்வி முகம்’’ தொடரவே போகிறது

முருகானந்தம் தவம்

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நவம்பர் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அந்த தேர்தலை எதிர்கொண்டு பெரும்பான்மையுடன் அரசமைக்க தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முனைப்புடன் உள்ள நிலையில் அதனைத் தடுத்து பிரதமர் பதவியுடன் அரசமைக்க சில கட்சிகளும் எதிர்க்கட்சித்தலைவர் பதவியை கைப்பற்ற சில கட்சிகளும் வியூகங்களை அமைத்து வருகின்ற போது ஏற்கனவே எதிர்கட்சியாகவிருந்த சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இந்த தேர்தலில் ‘‘தோல்வியடைகின்றேன் பந்தயம் பிடி’’என்றவாறாக செயற்பட்டு வருகின்றமை கட்சி உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் விசனமும் வேதனையுமடைய வைத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் முன்னாள் எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச மீது வறட்டு பிடிவாதம் கொண்டவர்,தலைக்கனம் பிடித்தவர்,கட்சியின் அடுத்த நிலை,தலைவர்கள்,உறுப்பினர்களின் கருத்துக்களை மதிக்காதவர்,மனைவி பேச்சைக் கேட்டு கட்சியை வழிநடத்துபவர் என்றவாறாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையிலேயே தற்போது அந்த குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் வகையில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் புறக்கணிப்புக்களும் பதவிபறிப்புக்களும் ,கழுத்தறுப்புகளும் இடம்பெறுவதனால் கட்சி பலவீனமடைந்து வருகின்றது.

ஏற்கனவே நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுமாறும் அதன் மூலம் இரு கட்சி ஆதரவாளர்களையும் ஒன்றிணைத்து வெற்றியை உறுதிப்படுத்த முடியுமெனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட தலைவர்கள், உறுப்பினர்கள் சிலர் ஆலோசனைகளை வழங்கிய போதும் தனது தலைக்கனத்தாலும் வறட்டுப் பிடிவாதத்தாலும் அதனை நிராகரித்ததுடன் அவ்வாறான ஆலோசனைகளை முன் வைத்தவர்களை துரோகிகள் போன்று நடத்தியதாலுமே ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச தோல்வியடைய நேரிட்டதாக அவரின் கட்சிக்குள்ளேயே குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தும் அதன் மூலம் பாடம் கற்காது தனது பிடிவாத கொள்கைகளில், குணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது அதே சர்வாதிகாரத்தனத்தோடு சஜித் பிரேமதாச நடந்து வருவதனால்தான் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களை கட்சிகள் தங்களுக்குள் இறுதி செய்துள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்கள் தலைமையுடனான முரண்பாடுகள் காரணமாக வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதுடன் இன்னும் சில முக்கியஸ்தர்கள் கட்சியின் முக்கிய பதவிகளிலிருந்து விலகியும் வருகின்றனர்.

இதில் முதல் எதிர் நடவடிக்கையாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தனது வேட்பு மனுவை வாபஸ் பெற்றுள்ளதுடன் தனக்கு எவரும் வாக்களிக்க வேண்டாமென ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்களையும் கேட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா தொகுதிக்கான பிரதம அமைப்பாளர் பதவியிலிருந்து முன்னறிவித்தலின்றி கட்சியின் தலைவரான சஜித் பிரேமதாசாவினால் தான் நீக்கப்பட்டதையடுத்தே அஜித் மானப்பெரும எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தனது வேட்பு மனுவை வாபஸ் பெற்றுள்ளார்.

இது தொடர்பில் அஜித் மானப்பெரும வெளியிட்டுள்ள அறிக்கையில், கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் முடிவு குறித்து விரக்தியை வெளிப்படுத்தியுள்ளதுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா தொகுதிக்கான பிரதம அமைப்பாளர் பதவியிலிருந்து தான் நீக்கப்பட்டமை தனக்கு அறிவிக்கப்படாமல் எடுக்கப்பட்ட முடிவு எனவும் கட்சித்தலைவரின் இந்த முடிவால் பழிவாங்கப்பட்டதாக உணர்வதாகவும் அதனாலேயே ஏற்கனவே தேர்தலுக்கான வேட்புமனுவைச் சமர்ப்பித்துள்ள நிலையில் கட்சித்தலைவரின் பழிவாங்கலுக்கு பதிலடியாக தனது வேட்புமனுவை வாபஸ் பெற முடிவு செய்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடவிருந்த கருணாரத்ன பரணவிதானவும் தனது வேட்புமனுவை வாபஸ் பெறுவதாக அறிவித்துள்ளார் அத்துடன் எதிர்வரும் பாராளுமன்றத்தேர்தலில் தனக்கான வேட்பாளர் எண்ணுக்கு வாக்களிக்க வேண்டாம் என அவர் கட்சி ஆதரவாளர்களிடம் கேட்டுள்ளார். தமது கட்சியான ஐக்கியக் குடியரசு முன்னணிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவருக்கும் இடையிலான உடன்பாடு தொடர்பான பிரச்சினை காரணமாகவே தன்னால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கருணாரத்ன பரணவிதான தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியில் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் நெருங்கி செயற்படும் பெண் முக்கியஸ்தர்களும் தற்போது ஓரம்கட்டப்படத் தொடங்கியுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் தீவிர செயற்பாட்டாளரான பிரபல நடிகை தமிதா அபேரத்ன இதன் முதல் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்டத்தின் வேட்பாளர் நியமனப் பட்டியலில் நடிகை தமிதா அபேரத்னவின் பெயர் முதலில் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் அவர் வேட்புமனுவில் கையொப்பமிடுவதற்காக இரத்தினபுரி மாவட்டச் செயலகத்திற்கு வந்தபோது, அந்தப் பட்டியலில் அவரது பெயர் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். நடிகை தமிதா அபேரத்ன பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட வேட்பு மனுவில் கையொப்பமிட்டிருந்தார். இந்நிலையில் வேட்பு மனுவை தாக்கல் செய்ய சென்றபோதே வேட்பாளர் பட்டியலில் அவருடைய பெயர் மையிட்டு அழிக்கப்பட்டிருந்தமை அவருக்கு தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், “ஹேஷா விதான சகோதரர் என்னிடம், சகோதரி தமிதா, நீங்கள் ஏன் இரத்தினபுரியில் போட்டியிடக் கூடாது எனக் கேட்டார்.

நான் எங்கு கேட்பது என்று யோசிக்கவில்லை என்றேன். அதற்கு இல்லை அக்கா, நான் உங்களை இங்கு போடுகிறேன், இங்கு பெண்களின் பிரதிநிதித்துவம் இல்லை என்றார். நீங்கள் முன்மொழிந்தால் நான் வருகிறேன் என்றேன். அப்படித்தான் எனது பெயர் வந்தது. அதனை இல்லை என்று கூறினால் என்னிடம் ஆதாரம் உள்ளது. என் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று. நான் ஆதாரத்துடன் பேசுகிறேன். இந்த ஆதாரங்கள் அனைத்தும் ஊடகங்கள் முன் காட்ட தயாராக உள்ளன.நான் நீதிமன்றம் செல்வேன். எனது அடிப்படை உரிமைகள் தெளிவாக மீறப்பட்டுள்ளன என்றார்.

அடுத்ததாக ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பான சமகி வனிதா பலவேகயவின் தேசிய அமைப்பாளர் பதவி மற்றும் கட்சியின் ஏனைய அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் விலகுவதாகவும் ஹிருணிகா பிரேமச்சந்திர அறிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது அமைப்பாளர்கள் தமது கடமைகளை நிறைவேற்றவில்லை என கட்சியில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினால் ஏற்பட்ட மன விரக்தியே தனது பதவி விலகலுக்கு காரணம் என ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

மற்றும் கட்சியின் ஏனைய அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் விலகுவதாகவும் எனினும் கட்சியிலிருந்து விலகவில்லையெனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய பெண் பிரமுகரான ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். விசேட ஊடக சந்திப்பை நடத்தியே இந்த அறிவிப்பை வெளியிட்ட அவர், சஜித் பிரேமதாசவின் தோல்வியின் பொறுப்பை, சஜித் பிரேமதாசவுக்கு மிகவும் நெருக்கமான கட்சிகள் மற்றும் கட்சியின் அடிமட்டத் தலைவர்கள் மீது சுமத்தியுள்ளமை குறித்து தாம் ஏமாற்றமடைவதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் நடிகை தமிதா அபேரத்ன கட்சித்தலைமையினால் ஏமாற்றப்பட்டமை தொடர்பிலும் தனது விசனத்தை வெளியிட்டுள்ளார்.

அடுத்தாக ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலரும் வடக்கு மாகாண பிரதான அமைப்பாளருமான உமா சந்திரபிரகாஷ் ஓரம்கட்டப்படுள்ளார். சஜித் பிரேமதாவின் வடக்கு விஜயங்களின் போதெல்லாம் அவரின் நிழலாகவே இருந்ததுடன் வடக்கு மக்களுக்கும் சஜித் பிரேமதாசாவுக்குமிடையிலான ஒரு உறவுப் பாலமாகவும் இருந்தவர் இந்த உமா சந்திரபிரகாஷ். சஜித் பிரேமதாசவின் பாடசாலைகளுக்கான நிதி உதவி ,பஸ் வழங்கல் போன்ற விடயங்களில் வடக்கு பாடசாலைகளும் நன்மை பெற்றதில் உமா சந்திரபிரகாஷின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. ஆனால் இவரும் தற்போது கட்சித்தலைவரினால் ஓரம்கட்டப்பட்டுள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்க உமா சந்திரபிரகாஷ் விரும்பியிருந்தபோதும் யாழ்ப்பாணத்தில் களமிறங்குமாறும் முதன்மை வேட்பாளர் என்ற அந்தஸ்தை தருவதாகவும் உமா சந்திரபிரகாஷுக்கு சஜித் பிரேமதாசவினால் உறுதியளிக்கப்பட்டது.

கட்சி தலைவரின் பணிப்புக்கு கட்டுப்பட்ட அவர் அதற்கு சம்மதம் தெரிவித்த நிலையில் யாழ் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளராக சமத்துவக்கட்சியின் தலைவரும் முன்னாள் எம்.பி.யுமான சந்திரகுமார் நியமிக்கப்பட்டு வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. உமா சந்திரபிரகாஷுக்கு கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வாய்ப்பும் மறுக்கப்பட்டு இறுதியில் யாழ் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளர் வாய்ப்பும் மறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்திக்குள் நடக்கும் குத்து வெட்டுக்கள்,

விலகல்கள்,வெளியேற்றங்கள்,

தலைவரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள்,ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள புத்தியுள்ளவர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நிராகரித்தமை போன்றவற்றால் சஜித் பிரேமதாசவின் ‘‘தோல்வி முகம்’’தொடரவே போகின்றது.



## வாழ்வியல் தரிசனம்

நினைவு அடுக்குகளில் பதிவுகள் பெருகிய வண்ணம் இருக்கின்றனவே தவிர, அவை நிகழ்ந்த பதிவுகளை அழிக்க முடியாமல் திணறுகின்றன. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும். இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும். இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும்.

இளமைக்கால சேட்டைகள், குறும்புகள், பாசக்கார நண்பர்களுடன் ஊர் சுற்றுவது, அந்தக் காலத்தல்ஈ பாடசாலைக்கு வராமல் ஒளிந்து கொண்டிருக்கும் மாணவர்களை, எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்கு கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே பிரம்பால் அடித்து, பாடசாலைக்கு அழைத்துக் கொண்டு செல்வார்.

இப்போது நினைத்தாலும் அந்ப் பசுமைமிகு எண்ணங்களில் இருந்து மீளமுடியாதுள்ளது. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும்.

கோவில் திருவிழாக்கல், நாடகங்கள், கூத்துகள். கோவில் திருவிழாக்கல், எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்கு கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே பிரம்பால் அடித்து, பாடசாலைக்கு அழைத்துக் கொண்டு செல்வார்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

## பாதுகாப்பு வேண்டும்



பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிட்டங்கி ஆற்றை அண்டிய பிரதேசமான சொறிக் கல்முனை புட்டியாறு பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த பெண்ணை முதலை இழுத்து சென்றுள்ள சம்பவம் திங்கட்கிழமை (14) மாலை இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சொறிக் கல்முனையைச் சேர்ந்த 58 வயதான ஞானபிரகாசம் டூரியநாயகி எனும் பெண்ணை முதலை இவ்வாறு இழுத்துச் சென்றுள்ளதுடன் இதுவரை அப்பெண்ணோ அல்லது சடலமோ மீட்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

காரைதீவு மாவடிப்பள்ளி நீர் ஓடையில் வழமையாக முதலைகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது.

முதலை நடமாட்டம் உள்ள இடங்கள், அபாயகரமான பிரதேசங்களில் குறித்த பிரதேச சபைகள் ,சுற்றுச் சூழல் அதிகாரிகள், வன பரிபாலன சபையினர், பொதுமக்களுக்கு தெளிவூட்டும் வகையில் எச்சரிக்கை பலகைகளை காட்சிப்படுத்த வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



### கிழக்கு சிறுபான்மையினர்

# பிரச்சினைகள் தீருமா?



ஹஸ்பர் ஏ ஹலீம்

அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பிரகாரம் ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களுக்கான ஆளுநர்கள் இராஜினாமா செய்ததை அடுத்து புதிய மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார்கள்.

கிழக்கு மாகாண ஆளுநராக, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தராக செயற்பட்ட ஜயந்த லால் ரத்னசேகர நியமனம் செய்யப்பட்டு திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் தனது கடமைகளை 26.09.2024 ந் திகதி அன்று பொறுப்பேற்றார்.

கிழக்கு மாகாணம் அதிகூடிய தமிழ் பேசும் சிறுபான்மை மக்களை கொண்ட மாகாணம் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த, செந்தில் தொண்டமான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். எது எவ்வாறாக இருந்தாலும் பல மக்கள் பிரச்சினைகளை கொண்ட மாகாணமாக காணப்படுகிறது நில அபகரிப்பு, சட்ட விரோத மண் அகழ்வு, விவசாய மீன் பிடி என பல பிரச்சனைகளை மக்கள் சந்தித்து பல சவால்களை எதிர்கொண்டனர். எனினும், தீர்வு இன்னும் கிடைக்கவில்லை. ஆனால், தற்போது நியமிக்கப்பட்ட ஆளுநர் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த ஒருவராக இருக்கிறார்.தமிழ் மொழியிலும் உரையாடக் கூடிய ஒருவராக காணப்பட்டாலும் தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வு கிடைக்குமா? என சந்தேகம் எழுந்துள்ளது.

மட்டக்களப்பில் மயிலத்தமடு பிரச்சினை, திருகோணமலையில் மக்கள் தனியார் காணிகள் துறைமுக அதிகார சபையால் அபகரிப்பு, பல ஏக்கர் காணிகள், அரிசி மலை விகாரைக்கு வர்த்தமானி மூலம் ஒதுக்கப்பட்டமை, தொல்பொருள் என்ற போர்வையில் காணி அபகரிப்பு, பல ஏக்கர் வயல் நிலங்களை அபரித்த வனஜீவராசிகள் திணைக்களம் என பல தரப்பட்ட மக்கள் பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவை அனைத்தும் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களுடைய பிரச்சினைகளாகும் தற்போதைய அரசாங்கம் இம் முறை 2024 ம் ஆண்டில் இடம் பெற்ற தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க 7,017,058 வாக்குகளை பெற்று 50.30 சதவீதத்தை பெற்று ஜனாதிபதியாகி உள்ளார். இவருக்கு வடக்கு, கிழக்கு மக்கள் பெரும்பான்மையாக வாக்குகளை அளிக்காவிட்டாலும் தென்னிலங்கை வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளார்.

இதனால் வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் வாக்குகளை வைத்து தீர்மானிக்கப்படுமா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இது போன்று சஜித் பிரேமதாச 5,083,968 வாக்குகளை பெற்று 36.44 சதவீதத்தை பெற்றுள்ளார். ரணில் விக்ரமசிங்க 1,182,234 வாக்குகளை பெற்று 8.47 சதவீதத்தை பெற்றுள்ளார் இருந்த போதிலும் தமிழ் பொதுக் கட்டமைப்பு வேட்பாளராக களமிறக்கப்பட்ட அரியநேத்திரன் பாக்கிய செல்வம் 226,345 வாக்குகளை பெற்று 1.7 வீதத்தை பெற்றிருப்பது வடக்கு,கிழக்கு மக்களின் வெற்றியாக பார்க்கப்படுகிறது. இதன் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கான ஒரு அடித்தளமாக நல்ல செய்தியை தமிழ் கட்சிகளுக்கும் ஏனைய கட்சிகளுக்கும் எடுத்து காட்டாக விளங்குகிறது.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் பொதுக் கட்டமைப்பு மூலம் வேட்பாளர்கள் வடக்கு, கிழக்கில் இறக்கப்படுவார்களானால் தமிழ் மக்களுக்கு மேலும் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வழிசமைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

இம்முறை பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து நால்வரும், மட்டக்களப்பில் ஐவரும்,திகாமடுல்ல மாவட்டத்தில் ஏழு உறுப்பினர்களும் தெரிவாக உள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கையின் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை சமூகங்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் தமிழ் கட்சிகள் இணைந்து செயல்படுவதை மக்கள் எதிர்பார்க்கின்றனர். அது போன்று தமிழ் பொது கட்டமைப்பின் ஊடாக தொடர்ச்சியான முன்னெடுப்புக்களால் களத்தில் இறங்கினால் மக்கள் பிரதிநிதிகளை நிச்சயம் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாது. இழுத்தடிப்பு செய்யப்படுகிறது நல்லாட்சி அரசாங்கத்தில் ரணில்- மைத்திரி ஆட்சியில் கிழக்கு மக்களுடைய காணிப் பிரச்சினைகள் முழுமையாக தீராமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டது. இம் முறை தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி பொறுப்பை ஏற்றதன் பின் நாட்டு மக்களுக்கு நல்ல பல விடயங்களை கூறியுள்ளதோடு ஊழல் அற்ற நாட்டை உருவாக்குவதாக கூறியுள்ளார்.

இது எதிர்காலத்தில் நடைமுறைச் சாத்தியம் ஆக்கப்பட்டால் நன்று ஆனால் புதிய கிழக்கு மாகாண ஆளுநரும் தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்பதுடன் மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுத்து சமூக, பொருளாதார, கல்வி துறைகளிலும் முன்னேற்றமடைய செய்ய வேண்டும்.

சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற வகையில் சுதந்திரமாக வாழ வழி அமைத்துக் கொடுக்கவும் முன்வர வேண்டும். கிழக்கில் தமிழ், சிங்களம்,முஸ்லிம் என மூவின சமூகங்களை சேர்ந்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர் அன்றாட ஜீவனோபாயமாக மீன் பிடி, விவசாயம் என பாமர மக்கள் வாழ்க்கை காணப்படுகிறது இதற்காக இன மத பேதமற்ற முறையில் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல திட்டங்களை வகுப்பதுடன் சமூக நல்லிணக்கம் ஊடாக மாகாணத்தை வலுப்படுத்த முயற்சிக்க வேண்டும் என்பது எல்லா மக்களினதும் ஏகோபித்த எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.





# முயற்சி செய்ய வேண்டும்



கனிஸ்ரா ஜெயகாந்தன்,
ஊடகக்கற்கைகள்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்



“பசியின் வலியை உணர்ந்தவர்களுக்கு உணவு அருமை நன்றாகவே தெரிந்திருக்கும்”இன்று நாம் மூன்று வேளை உணவு உண்ணும் போது உலகில் ஏதோ ஒரு மூலையில் ஒரு குழந்தை தனது ஒருவேளை உணவிற்காக காத்திருக்கின்ற நிலையில்தான் உலக உணவு தினம் நாள் நினைவு கூறப்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 16ஆம் திகதி உலக உணவுதினமும், ஒக்டோபர் 17ஆம் திகதி உலக வறுமை ஒழிப்பு நாளையும் ஐக்கிய நாடுகள் சபை அனுஸ்ரிக்க அனைத்து மக்களையும் அழைக்கின்றது.

உலக உணவு தினமானது 1979 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபைகளின் ஏற்பாடு செய்யப்பட்டு இன்றுவரை நினைவு கூரப்படுகின்றது. உலகமெங்கும் பல மில்லியன் கணக்கான மக்கள் இன்னும் தீராத பட்டினி மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுகின்றன என்ற உண்மையைப் பற்றி சிந்திக்க வேண்டிய நாளாக இந்தநாள் கருதப்படுகிறது.

அந்தவகையில் 2024 ஆம் ஆண்டு உலக உணவு தினத்திற்கான கருப்பொருளாக “சிறந்த வாழ்க்கை மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான உணவுக்கான உரிமை” என்ற விடயம் காணப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கு அடிப்படை தேவைகளில் ஒன்றாக உணவு காணப்படுகின்றது. ஒவ்வொரு மனிதர்களுடைய கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப உணவு என்ற விடயம் வேறுபட்டாலும் அனைவருக்கும் பொதுவான ஒருவிடயமாக உணவு அமைகின்றது.

உணவு பாதுகாப்பு என்பது சாப்பிடுவதற்கு பொருத்தமானது உணவு என்பதையும் தாண்டி உணவுக்கான கிடைப்பு உணவிற்கான அணுக்கல் மற்றும் பயன்பாடு ஆகியவிடயங்களை உள்ளடக்கியுள்ளது.

உலகளாவிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் 2022 இல் 691 முதல் 783 மில்லியன் மக்கள் பட்டினியை எதிர்கொண்டனர். இவை வரும் எண்ணிக்கையாக மாத்திரம் பார்க்கப்படாது. ஒவ்வொரு மக்களின் உயிர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விடயமாக நோக்க வேண்டிவிடயமாக அமையப்பெறுகிள்றது.

இவற்றை அறியாது மனிதன் தனக்கு கிடைக்கின்ற மேலதிக உணவுகளை வீண்விரயம் செய்கின்றமையும், அலட்சியம் செய்கின்ற போக்கினையும், உணவில் மீதம் வைத்து எறிகின்ற போக்கினையும் எம் சமூகத்தில் அவதானிக்க முடிகின்றது.

ஒருபுறம் உணவிற்கான ஏக்கம் மறுபுறம் உணவிற்கான ஏக்கம் இன்றும் எம்சமூகத்தில் தொடர்கதையாகும் பிரச்சனையாக அமைகின்றது.



உலக உணவு தினத்தை நினைவு கூறும் போது யாரும் பசியுடன் படுக்கைக்கு செல்லாத உலகத்திற்கான நமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டிய நிலைக்கு மாற்ற வேண்டிய அழைப்பு எமக்கு விடுக்கப்படுகின்றது.

நாம் ஒரு உணவினை நுகர்வதில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளாக உணவின் பன்முகத்தன்மை, ஊட்டச்சத்து, மலிவு, அணுக்கள் மற்றும் பாதுகாப்பு ஆகிய விடயங்கள் அமையப்பெறுகின்றன.

உணவின்மை காரணமாக ஊட்டச்சத்துக்குறைபாடு, நுண்ஊட்டச்சத்து குறைபாடு, கண்பார்வை குறைபாடு மற்றும் உடல் மெலிவு மற்றும் பருமன் போன்றன முக்கிய பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

உணவிற்கான வறுமை என்பது இப்போது பெரும்பாலான நாடுகளில் காணப்படுகின்ற ஒரு பிரச்சனையாகவும் அமையப்பெறுகின்றது.

உலக நாடுகளில் காணப்படுகின்ற மோதல்கள், ஆர்ப்பாட்டங்கள், பொருளாதார வீழ்ச்சிகள், பொருட்களுக்கான விலையேற்றம், காலநிலைமாற்றம் போன்றவற்றின் காரணமாக பசி மற்றும் ஊட்டத்திற்கு குறைபாடு மக்கள் மத்தியில் அதிகரிக்கின்றது. உலகம் அனைத்து மக்களுக்கும் உணவளிக்க போதுமான உணவை உற்பத்தி செய்கின்றது.

உலகம் முழுவதும் பசி பட்டினியால் தவிக்கும் மக்கள் கோடிக்கணக்கானர் உள்ளனர். பல நாடுகளில் குறிப்பாக சோமாலியா, எத்தியோப்பியா, உகாண்ட போன்ற நாடுகளில் தினம்தினம் பட்டினியால் மரணமாகும் சம்பவங்கள் தொடர்ந்து பதிவாகிக்கொண்டே இருக்கின்றது.

உலகளாவிய ரீதியில் 52 கோடி மக்கள் பசியால் வாடுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன, அதாவது ஒன்பது பேரில் ஒருவர் பசியால் இறக்கின்றனர், மூன்று பேரில் ஒருவர் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

2020 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி உலகளாவிய ரீதியில் ஐந்து வயதுக்குட்பட்ட ஐந்து குழந்தைகளில் ஒருவர் வளர்ச்சி குன்றியுள்ளனர்.

பலருக்கு போதிய அளவு ஊட்டச்சத்து இல்லாதது இதற்கு காரணமாகும்.

மேலும், கடந்த ஆண்டு ஆப்பிரிக்காவில் ஐந்தில் ஒரு பங்கு மக்கள் பட்டினியை எதிர்கொண்டனர். தற்காலத்தில் விவசாய நிலங்களை அழித்து அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளுதல், பாரிய கட்டடங்களை அமைத்தல், விவசாய நிலங்களுக்கு இரசாயன கிருமி நாசிகளின் பயன்பாடு போன்றவற்றின் காரணமாக உணவு நஞ்சாகுதல் ஏற்படுகிறது.

உடல் ஆரோக்கியத்தின் அச்சாணியாக அமைவதே உணவுதான். ஆனால், இன்று அவரசர உலகில் நாம் துரித உணவுகளை உண்டு வயிற்றை நிரப்ப பழகிவிட்டோம். பசியை போக்க மட்டுமே உணவு தேவை என்ற நிலை வந்துவிட்டது.

இதுவே இந்த தலைமுறையினருக்கு ஊட்டச்சத்து குறைபாடு உருவாவதற்கு காரணமாக அமைகின்றது.

காய்கறிகள், பழங்கள், கிழங்கு வகைகள், கீரை வகைகள் என ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்ணாது துரிதஉணவு, மென்பானங்கள் போன்றவற்றை விரும்பி நுகர்வதனை தவிர்த்து இன்றை உணவு தினத்திலாவது உணவின் முக்கியத்துவத்தினை உணர்ந்து உடலிற்கு தேவையான சத்தான உணவுகளை உட்கொள்ள முயற்ச்சி செய்ய வேண்டும்.

அது மாத்திரம் அன்றி உணவுகளை வீண்விரையம் செய்யும் போது பசியால் வாடும் நபர்களுக்கு அதனை வழங்க முன்வருவோம், பிறந்தநாள் போன்ற விசேட தினங்களில் ஆடைகளுக்கும், ஆடம்பரத்திற்கும் அதிகம் செலவு செய்யாது ஒரு முதியோர், இல்லம், சிறுவர் தினம் அல்லது உணவுக்காக வாடுவோரை கண்டு அவர்களுக்கு ஒருவேளையாவது வயிறாற உணவளித்து அவர்களின் திருப்தியில் இறைவனை காண முற்படுவோம்.

தொழில்நுட்ப நெருக்கத்தினால் அந்நியமாகும் உறவுகள்

# ‘ஹோம்’



சுப்பிரமணியன் ஜனுர்ஷா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.




இன்றைக்கு உலகளாவிய ரீதியில் விருத்தி கண்டுள்ள தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான வளர்ச்சி உலகையே ஆட்டுவிக்கின்றது என்பதனை எவராலும் மறுக்க முடியாது. நாம், தொலைபேசியில் மூழ்கி நிஜத்தை தொலைத்து நிழல்களை தேடுகின்ற உலகத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த உலகில் தொழில்நுட்பம் என்பது உருப்பெறுவதற்கு முன்பே மானுட உறவுகள் வலுப்பெற்றிருந்தது என்பது உண்மையே. இன்றைக்கு உறவுகளுக்கு இடையிலான நெருக்கமும் மதிப்பும் அன்பும் நலிவுற்று செல்வதற்கு தொழில்நுட்ப வளர்ச்சி உந்துதலாக அமைகின்ற நிலையில் காலத் தேவையறிந்து யதார்த்தத்தை படம்பிடித்து காட்டியுள்ளது. இயக்குனர் ராஜின் தாமஸ் அவர்களது இயக்கத்தில் வெளியாகிய ‘ஹோம்’ (Home) என்ற மலையாளத் திரைப்படம்.

2021 ஆகஸ்ட் 19இல் வெளியாகிய ஹோம் என்ற திரைப்படம் 2 மணி 40 நிமிடங்களில் இன்றைய உலகின் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள உறவுகளில் தொலைபேசி எந்த அளவுக்கு வேரூன்றி உள்ளது. இதனால் உண்டான குழப்பங்கள், தலைமுறை இடைவெளி என்பவற்றை பற்றி இந்த படம்பேசியுள்ளது. தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டாலும் அன்பிற்கு ஈடுகொடுக்க முடியாது. அன்பை தாண்டி எதுவும் இல்லை என்பதை சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது. பல இடங்களில் வசனங்களும் காட்சிகளும் எமக்குவீட்டில் இருப்பது போன்ற உணர்வை தோற்றுவித்து விடுகிறது.

இந்த திரைப்படத்தில் ஐந்து பேர் கொண்ட குடும்பத்தில் இடம்பெறும் காட்சிகள் அமையப்பெற்றுள்ளன. பிரதான கதாபாத்திரமான தோளுக்கு மேல் வளர்ந்த மகன்களுடன் தோழனாக பழக முடியாமல் தொழில்நுட்ப அறிவு குறைந்த நடுத்தர வயது தந்தை ஒலிவர் ட்விஸ்ட் (இந்திரன்ஸ்), அடுத்த கட்டத்திற்கு போக முடியாமல் தடுமாறும் இயக்குனரான முதல் மகன்ஆண்டனி(ஸ்ரீநாத்பாஜி) குறும்புத்தனத்துடன் சமூக ஊடகத்தில் ஆர்வம் கொண்டுள்ள இளைய மகன்சார்ல்ஸ் (நாஸ்லென் கே.காஃபூர்), நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் தாத்தா அச்சப்பன், எவ்வளவு திட்டினாலும் குடும்ப தேவைகளை பார்த்து பார்த்து செய்யும் தாய் குட்டியம்மாள் (மஞ்சுப்பிள்ளை), ஆண்டனின் காதலி பிரியா அவளின் அப்பா ஜோசப் ஆகிய கதாபாத்திரங்கள் யதார்த்தமான நடிப்பின் ஊடாக கதைக்கு உயிரோட்டம் கொடுப்பதோடு கதைக்கும் நமக்குமான நெருக்கத்தையும் அதிகரிக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

69வது தேசிய திரைப்பட விருதுகளில் சிறந்த மலையாள திரைப்படத்திற்கான விருதினை தட்டிச் சென்றுள்ள இந்த படம் ஒலிவர் ட்விஸ்ட்என்ற மையக்கதாபாத்திரத்தை சுற்றி நகர்கிறது. ஒலிவர் என்ற கதாபாத்திரம் மொத்த படத்தையும் ஒற்றை ஆளாக சுமந்து செல்கின்றமையினால் சிறந்த நடிகருக்கான விருதையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

தந்தைக்கும் மகன்களுக்கும் இடையிலான தலைமுறை இடைவெளியானது எவ்வளவு தூரம் உறவுகளை தனித்து வைக்கின்றதுஎன்பதனை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்துகின்றதுஹோம். தொழில்நுட்பத்தை புரிந்துக்கொள்ள முடியாத தந்தை தனது பிள்ளைகளுடன் நெருங்கிபழகமுயன்றும் அவர்கள்சமூக ஊடகங்களில்சிக்கி கொண்டுள்ளமையினால் தந்தையை கவனியாமல், மதிக்காமல் அவமானப்படுத்துகின்ற காட்சிகளே கதையில் மிகுதியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப வளர்ச்சியினால் ஏற்படும் உறவு சிக்கல்களை மையக்கதையாகக் கொண்டுள்ள ஹோம் திரைப்படமானது தந்தையை ஒரு பொருட்டாக மதிக்காத, தந்தையின் பாசத்தை புரிந்து கொள்ளாத மகன்களின் தொழில்நுட்ப மோகத்தை வெளிப்படையாக சுட்டிக்காட்டி எமது சமூகத்தின் யதார்த்தத்தை பதிவு செய்துள்ளது. அவரது வெகுளித்தனமான நடிப்பு உண்மையிலே படத்திற்கு உயிர் கொடுத்துள்ளது. இன்றைக்கு சமூக ஊடகங்களிலே சாதாரணமான விடயங்களைக்கூட பதிவிட்டு வெளிப்படையான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் பலரது செயற்பாடுகளை படம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதாவது, வீட்டில் நடக்கக்கூடிய சிறு சிறு விடயங்களை கூட சமூக வலைத்தளத்தில் பதிவு செய்து இணையமே உலகமாக வாழக்கூடிய சார்ல்ஸ் என்ற கதாபாத்திரம் இதற்கு உதாரணமாக கையாளப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, ஆண்டனி ஒரு இயக்குனர். இவரது முதல் படம் வெற்றியடைந்த நிலையில் அடுத்த படத்திற்கான கிளைமாக்ஸ் முடிப்பதற்கு நீண்ட காலம் முயற்சிக்கின்றார்.

ஒரு வாரத்திற்குள் கதை தயாரிக்கப்பட வேண்டும் இல்லையெனில் பட வாய்ப்பு கிடைக்காதுஎனவும் முதல் படத்தை எழுதிய இடத்திலேயே மீதிக் கதையை தொடருமாறும் கூறுகிறார். இந்த காட்சியமைப்பானது ஒரு இயக்குனர் கதையினை எழுதும் பொழுது ஏதுவான சூழல் நிச்சயம் தேவைப்படுகின்றது என்பதனை சுட்டிக்காட்டுவதோடு வீடு என்பது எமது இலக்கை அடைவதற்கு வாய்ப்பான சூழல் என்பதனையும் பதிவு செய்துள்ளது.

ஒருவன் தனது இலக்கு நோக்கி பயணிக்கையில் அவனது தொலைபேசி பாவனையும் காதலும் எவ்வாறு தடையாக உள்ளது அதனால் எவற்றையெல்லாம் இழக்க நேரிடுகின்றது என்பதற்கு ஆண்டனி கதாபாத்திரம் முன்னுதாரணமாகும். இன்றைக்கு திறன்பேசிகள் கைகளுக்கு வந்ததும் சொந்த உறவுகள் அந்நியமாக மாறிப் போகிறார்கள், பாசப்பிணைப்பு எவ்வாறு முரண்படுகின்றது என்பதனை மிகத் தன்மையாகக் கூறுகிறது ஹோம்.

கதையும் காட்சியமைப்பும் கதைக்குஉயிரோட்டம் கொடுப்பதாக கையாளப்பட்டுள்ளன. வீட்டை விட்டு தனித்து வாழக்கூடிய தனது முதல் மகன் வீட்டிற்கு வந்ததும் தந்தை பரிதவித்து ஓடிவந்து தனது பாசத்தை வெளிக்காட்டுகையில், கட்டித்தழுவலாம் என அருகில் வருகையில் மகன் தொலைபேசியில் வேறொரு அழைப்பில் தீவிரமாக நுழைந்து கண்முன்னே நிற்கும் தந்தையைக் கூட கண்டுகொள்ளவில்லை. அவன் முடிப்பதாக இல்லை என தெரிந்ததும் அவரே விலகிச் செல்கின்ற காட்சியமைப்பு இன்றையகுடும்பங்களின் நிதர்சனத்தை வெளிப்படுத்துகின்றது.

நடிகர் ஒலிவர் ட்விஸ்ட் என்ற கதாபாத்திரத்தில் நடித்த இந்திரன்ஸ் என்பவரது நடிப்பு உண்மையிலே கதையின் நகர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியுள்ளது. மிக நேர்த்தியாகவும் யதார்த்தமாகவும் அமைந்த இவரது நடிப்பின் ஊடாகவே தலைமுறை இடைவெளி, தொழில்நுட்ப அறிவு போதாமை மற்றும் புறக்கணிக்கப்படும் அன்பு என்பன எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவமானம்,ஏமாற்றம், வலி, எதிர்பார்ப்பு, வெகுளித்தனம், ஆர்வம் என ஒட்டுமொத்த உணர்ச்சிகளின் களஞ்சியமாக இவரது நடிப்பு அமையப்பெற்றுள்ளது.

கதையோட்டத்தில் தன் மகன் ஆட்டோ பயோகிராபி புத்தகமொன்றை படித்துக் கொண்டிருக்கும் காட்சியில் ஒலிவர்‘சாதாரணமாக ஆட்டோ பயோகிராபி எழுத ஆரம்பித்து விட்டார்கள்’ என கூறும் போது ‘எல்லோராலும் எழுத முடியாது. யாரும் சந்திக்காத அனுபவங்கள் அல்லது சாகசங்கள் செய்திருந்தால் அவர்களால் எழுதமுடியுமே தவிர உன்னால் எழுத முடியுமா? அப்படி எழுதினால் அரைப்பக்கம் கூட வராது’ என தந்தையை அவமானப்படுத்துகின்றார் மகன். தனது மனக்குறையை அவமானத்தை வெளிப்படுத்த முடியாமல் ஒலிவர் அங்கிருந்து எழுந்து தனியாக சென்றுஅழுகின்றார் இந்த காட்சி உண்மையிலேயே மனதில் கனக்கின்றது.

அத்தனை பாசம், அக்கறை கொண்ட தந்தை புறக்கணிக்கப்படுகின்ற போது அதன் வலி எவ்வளவு கனமாக இருந்திருக்கும் என்பதனை அவரது முகபாவனை வெளிப்படுத்துகின்றது. மகன்களின் புறக்கணிப்பினால் தானும் ஒரு தொலைபேசி பயன்படுத்த வேண்டும். தன்னையும் காலத்தோடு பொருத்திக்கொள்ள வேண்டும் என ஆசைப்படும் ஒலிவர் மகன் நிகழ்நிலையில் தொலைபேசி ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக பார்த்துக் கொண்டிருந்தபோது தனக்கு தான் இன்ப அதிர்ச்சியாக பரிசு தரப் போகின்றார் என்று தானாகவே எண்ணி சந்தோஷப்படும் அந்த தந்தையின் உணர்ச்சி அடுத்த நொடியே வருங்கால மாமனாருக்கானது என தெரிந்ததும் நொறுக்கப்படுகின்றது.

குறிப்பாக தான் தொழில்நுட்ப அறிவில் பின்தங்கி இருப்பதனால் தன்னை புறக்கணிக்கனித்து வருங்கால மாமனாருடன் சிரித்து பேசுவதை பார்த்து மனம் வருந்துகின்ற காட்சிஅவரை இன்னுமே முடக்குவதாக உள்ளது. மகன்களுக்கும் தனக்கும் இடையே இருக்கும் தொழில்நுட்ப இடைவெளியை நிரப்ப எண்ணி புதிய ஸ்மார்ட்போன் ஒன்றை வாங்குகிறார் ஒலிவர். ஆனால், அதுவே அவர்களுக்கு இடையிலான அந்த இடைவெளியைப் பெரும் விரிசலாக மாற்றுகிறது.

# கடலோரக் கனவுகள்



றொசில்டா அன்டன்



சூரியன் எப்.எம் காலை நேர செய்தி பரப்பரப்பாக ஒலிப்பரப்பட்டுகொண்டிருந்தது. இன்று பலத்த காற்றுடன் மழை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும், கடுமையான காற்று வீசும் என்பதான செய்தி எச்சரிக்கையாக ஒலித்த வண்ணம் இருந்தது. கடலை நம்பி வாழும் குமரன் போன்றவர்களுக்கு நாள்தோறும் சவால் மிக்கதொன்றாகும்.

“மகள் அப்பாக்கு இந்த இரண்டு நாளும் கடலுக்கு போக முடியாது. டியூசன் காசு அடுத்த கிழமை தர்றன் என்று டிச்சர்ட சொல்லும்மா” “சரி அப்பா” மகள் இசை உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் கடைசி ஆண்டு கல்வி கற்கிறாள்.

மகன் இனியன் உயர்தரம் சித்தி பெற்று பல்கலைகழகம் செல்வதற்காக காத்துக்கொண்டிருக்கின்றான்.

தாய் மாலதி பிள்ளைகளின் படிப்பிற்காக பெரும்பாடுப்பட்டுக் கடையப்பம் செய்து அதில் வரும் சிறிய இலாப பணத்திலே குடும்ப செலவை கொண்டு போவாள். “குமரன் இன்டைக்கு தொழிலுக்கு போக முடியாது போல" நண்பன் மூர்த்தி கேட்க “என்ன மூர்த்தி செய்ய சொல்லு லோன் வேற இருக்கு கட்டனும். மகனும் யுனிவசிட்டி போகனும். மகள்ட டியுசன் காசு இப்படியே நம்மட பாடு நாய் படாதப்பாடு பட வேணாடியதாய் இருக்கு தொழிலும் படுத்துருச்சு" மூர்த்தியும், குமரன் பால்ய நண்பர்கள். கடற்தொழிலை நம்பி வாழும் இவர்களின் அன்றாட தேவை பூர்த்தி செய்வது கடினமே.

“அக்கா அக்கா வீட்டில யாருமில்லையோ" தகர கதவை யாரோ தட்டும் சத்தம் காதை கிழித்தது.

“பொறுங்க வாரேன் வாரேன் யாருப்பா" மாலதி வாசலை எட்டிப்பார்த்தாள்.

அங்கே லோன்கார தம்பி “வாங்க தம்பி இருங்க ஏதும் குடிக்கிறிங்களா" படபடப்புடன் கேட்டாள் மாலதி.

“எனக்கு ஒண்ணும் வேண்டாம் லோன் கட்டனும் இந்த மாதம் முடிய வேற போகுது காசு தந்திங்க என்றால் போயிடுவன். இல்ல என்றால் தெரியும் தானே அக்கா பிரச்சினையாகிடும்."

“தம்பி ராசா இரண்டு நாளாய் கடலுக்கும் போக முடியல என்ன செய்றது என்றே தெரியல இரண்டு நாள் டைம் தா ஐயா" அதற்கு லோன்காரன் “அக்கா லோன் எடுக்கைக்க யோசிச்சிருக்கனும் கட்ட முடியுமா? முடியாதா? நாளைக்கு வாரன் காசை எப்படியாவது பிரட்டி வைச்சிருங்க" என்று கண்டப்படி திட்டிவிட்டு போயிட்டான்.

“லோன் தரும் போது கெஞ்சுறான்கள். லோன் தந்த பிறகு திட்டுறான்கள்.” மனதிற்குள் முணுமுணுத்தாள்.

மகன் இனியன் வீதியில் லோன்காரன் வந்து போவதைக் கண்டு “அம்மா இந்தாங்க இதில இரண்டாயிரம் ரூபா இருக்கு முதலில் லோன்காரன் நாளைக்கு வந்ததும் காசை கொடுங்க" தாய் மகன் இனியன் தந்த பணத்தை பார்த்து “உனக்கேது இந்தப்பணம்"

“அம்மா என்ட நண்பன் கேசன் மேசன் வேலைக்கு தானே போறான். நான் வேற வீட்டில சும்மா தானே இருக்கன். அவன்ர வீட்டு நிலமையை சொன்னன் உதவிக்கு வேணுமாம் என்று அவன் கூட வேலைக்கு போனன்" என்று மகன் இனியன் கூறியதுமே தாய் கண் கலங்கினாள்.

“ராசா இனியன் பணத்தை கண்டதும் படிப்பை விட்டுறாதடா நானும் ,அப்பாவும் எப்பாடு பட்டாவது படிக்க வைக்கிறோம். நீயும், தங்கச்சியும் டொக்டராக வரனுமய்யா அது தானே உங்கட இருவர்ட கனவும்" தாய் அழுவதை பார்த்த மகன் இனியன் “நான் படிப்பன் அம்மா நீங்க யோசிக்காதீங்கோ" என்று விட்டு கிணற்றடி பக்கம் போனான்.

மறுநாள் விடிந்ததுமே லோன்காரன் வாசலில் வந்து நின்றான். “இந்த தம்பி இரண்டாயிரம் பிடி" வாங்கி கொண்டவன் கையெழுத்தையும் பெற்றுக்கொண்டு சிறிதும் நில்லாது சென்று விட்டான். மகன் வேலைக்கு போவதை காணும் போது தாய் மாலதியும், தந்தை குமரனும் கவலையுற்றார்கள்.

இரண்டு நாட்களுக்குப்பின் குமரன் கடலுக்கு போக ஆயத்தம் செய்தார். “மூர்த்தியும், இன்னும் சிலரும் வந்து கரையில் இருந்த படகை இழுத்துக்கொண்டு கடலுக்குச் சென்றார்கள். அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து தாக்குதல் நடத்தவதைப் போல இருந்தது.

மிக சிரமங்களுக்க மத்தியில் கடல் தாயை வணங்கிவிட்டு தங்கள் பயணத்தை மேற்கொண்டார்கள்.

“நிறைய மீன் இன்று வலையில சிக்கும் போல குமரா"

“ஓம் மூர்த்தி ஒரு கிழமையாக யாருமே கடல் பக்கம் கூட எட்டி பார்க்கல இன்று நிறைய மீன் பட்டால் போதும் இருக்கிற கொஞ்ச கடனையாவது கட்டிட்டு நிம்மதியாக வாழலாம். கனவுகளுடனே நம் வாழ்க்கை போகுதய்யா" பெருமூச்சு விட்டான் குமரன்.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மூன்று, நான்கு நாட்கள் தொடர்ச்சியாக கடலிலே தங்கள் படகுகளில் தங்கி நின்றே மீன் பிடிப்பார்கள். தங்குவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளுடனே கடலுக்குச் செல்வது வழக்கம். நடுக்கடலில் தத்தளிக்கும் வாழ்க்கை.

மாலதி வீட்டின் சாளரத்தின் வழியாக கடலை பார்த்த வண்ணமே மாலை நேர கடையப்பம் செய்துக்கொண்டிருந்தாள்.


மகன் வழமை போல கூலி வேலைக்கு சென்று வந்தான். இசை பரீட்சைக்காக கவனமாக படித்துக்கொண்டிருந்தாள். ஐந்து நாட்களாகியும் குமரனின் படகு கரைக்கு வரவில்லை. எவ்வித தொடர்பும் இல்லை. “கடல் தாயே உன்னை நம்பி வாழுறோம் அம்மா எங்களை காப்பாற்று தாயே” மாலதி வேண்டாத தெய்வம் இல்லை.

குமரனுடன் சென்ற மூர்த்தி, அவர்களின் தோழர்கள் பற்றி எந்த செய்தியும் இல்லை. கடற்கரையில் சனங்கள் நிறைந்து காணப்பட்டார்கள். பொலிஸ் வந்தது. விசாரணைகள் செய்தார்கள். குமரன் பயணப்பட்ட படகை தேடி பல படகுகள் புறப்பட்டன. நல்ல செய்தி வரும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும். மாலதி அழுதழுது அவளால் முடியவில்லை. மகனும், மகளும் கவலையுடன் கடற்கரையே பார்த்த வண்ணம் இருந்தனர்.

தேடிப்போன படகுகள் எல்லாம் மீண்டும் வெறுமையுடன் வந்தன. சூரியன் எப்.எம். ”ஐந்து மீனவர்களுடன் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற படகு காணாமல் போய்விட்டது. தேடுதல் பணி ஆரம்பமாகியுள்ளது” என்ற காலை நேர செய்தி ஒலிப்பரப்பாகிக் கொண்டிருந்தது.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகின. “மகன் நேரமாகுது எழும்புங்க வெளில கேசவன் வந்து நிக்கிறான்”. “ஓம் அம்மா உடம்பெல்லாம் வலி இசை ஆஸ்பத்தரிக்கு போயிட்டாளோ” கேள்விக் கேட்டுக்கொண்டே இனியன் அவசரமாக வேலைக்கு போக எழும்பினான் ”ஓம் மகன் இசை போயிட்டாள்.”

இனியன் கூலியாக இசை டொக்டாராக தங்கையின் ஊடாக அவனின் கனவு நனவாகியது.



# சுயதேற்றமாக கலை

## சுசிமன் றினோசனின் புதிய ஊடக வெளிப்பாடுகள்

பிரியதர்சினி செல்வராசா,
கலை வரலாறு,
இறுதி ஆண்டு மாணவி,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் மாணவர் அமைப்பான கலைவட்டத்தின் ஆதரவில் சுசிமன் றினோசன் என்ற கலைஞரின் “சுய தேற்றம்” எனத்தலைப்பிடப்பட்ட புதிய சாதனங்களினாலான கலைக் கட்சியானது நுண்கலைத்துறை கலைக்கூடத்தில் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்கு இடம்பெற்றது. இக்காட்சியில் இடம்பெற்ற படைப்புகள் புதிய தொழில் நுட்ப ரீதியிலான சாத்தியப்பாடுகளில் இருந்து உருவானவை என்பதுடன் இவை பாரம்பரிய மற்றும் நவீன கலை வடிவங்களில் இருந்து வேறுபட்டனவாக அமைந்திருந்தன. சுசிமன் றினோசன் இலங்கை மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு காண்பியக் கலைஞர். நுண்கலை இளமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் முதுமாணிப்பட்டத்தை பாகிஸ்தானிலும் பெற்றுள்ளார். றினோசனின் கலைப்படைப்புகள் அவரது தனிப்பட்ட அனுபவத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டவை. அவர் தனது கலைப் படைப்பின் மூலம் தன்னைக் கண்டுபிடிப்பதில் ஆர்வமாக உள்ளதாகக் குறிப்பிடுகிறர். அவருடனான சிறிய உரையால் இங்கு பதிவு செய்யப்படுகிறது.

**உங்களுடைய கலைத்துறை ஆர்வத்தின் பின்னணிபற்றிக் கூற முடியுமா?**

நான் மட்டக்களப்பில் பன்குடாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். எனக்கு சிறுவயதில் இருந்து கலையில் ஆர்வம் இருந்தது. மிஷனரிக்குச் சேர்வதற்காகப் போய் அங்கு சித்திரம் படிக்க இயலாது என்ற காரணத்தினால் அதனை விட்டு வெளியே வந்தேன். அதன்பின் பாடசாலையில் படிக்கும் காலப் பகுதிகளில் எனது ஆர்வத்தினை பிரயோகித்து சிறிய சிறிய சித்திர வேலைகளை என்னைக் கொண்டு செய்து கொள்வார்கள். குறிப்பாகப் படம் வரைதல், அலங்காரங்கள் செய்தல் என்பவற்றை. அப்போது நானும் எனது நண்பனும் சேர்த்து இயேசு நாதனின் உருவத்தை வரைந்து கொடுத்தோம். பின்னர் எனது சகோதரரும் காண்பியக்கலைஞருமான நிர்மலவாசனின் கதைகளைக்கேட்டு ஆர்வத்துடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வந்து எனது இளங்கலை பட்டத்தினை கற்றேன். முதுகலைமாணிப் பட்டத்தினை பாக்கிஸ்தானில் கற்றுக் கொண்டேன்.

பாடசாலைக் காலத்தில் ஓவியத்தைத் தொடர்ந்தாலும் மனித உடல் வரைவது பிரதானமாகக் காணப்பட்டது.ஆனால் மனித உருவத்தை வரைய எனக்கு பெரியளவு ஆர்வம் இருக்கவில்லை. இருந்தாலும் உடலைப் பயன்படுத்தி படைப்புகளை வரைந்தேன். இளங்கலை பட்டத்தினை கற்பதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு வந்த போது உருவம் இல்லாத படைப்பினை கொண்டு வரலாம் என்ற எண்ணத்தில் வந்தேன். ஆனால் மனித உடல் என்ற ஒன்று மீண்டும் பயன்படுத்த வேண்டிய நிலை வந்தது. 2016 உடம்பு இல்லாமல் எப்படி சுயத்தை வெளிப்படுத்துதல் என்பதனை செய்துபார்க்க ஆரம்பித்தேன். பல்கலைக்கழகத்தில் கொடுக்கப்பட்ட செயற்பாடுகளில் உடம்பை பயன்படுத்தினாலும் அதனை மறைத்து பயன்படுத்தி அதன் மூலம் எனது ஆர்வத்தையும் படைப்புக்குள் கொண்டு வந்து எனக்கான பாதையினை அமைத்துக் கொண்டேன். சிறிது காலம் உடம்பை விட்டு கட்டிடம் சம்பந்தப்படுத்தியும் காட்சி படங்களினை உருவாக்கிக் கொண்டேன்.



எனக்கு இலங்கையின் முக்கியமான சம காலக்கலைஞர்களுள் ஒருவரான ஜெகத்வீரசிங்கவுடன் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. நான் உயர்தரத்தில் கல்வி கற்றபோதும் கூட அவரைப் பார்ப்பதற்காக கொழும்பிற்குச் சென்று வருவேன். அவரைப் பார்க்க சென்ற போதெல்லாம் தீர்த்த குழுவிற்கு சென்று அங்கே இருக்கின்ற கண்காட்சிகளையும் பார்வையிட்டு சில நேரங்களில் அங்கேயே தங்கிவிடுவேன். அதனைத் தொடர்ந்து பல இடங்களுக்கு சென்று கண்காட்சிகளை பார்வையிடுவதில் ஆர்வம் அதிகமாக எனக்கு இருந்தது. பல்கலைக்கழகத்தின் இறுதிக்காலப் பகுதியில் கூட ஜெகத் வீரசிங்கவுடன் தொடர்பானது காணப்பட்டதனால் எனக்கான பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு பயிற்சி பட்டறைக்காக அவருடன் இணைந்து கொண்டேன். இவரின் மூலமாகவே முதுகலை மணி பட்டத்தினை பாகிஸ்தானில் தொடர்வதற்கு எனக்கு ஒரு அரிய வாய்ப்பு கிடைத்தது.

**ஏன் புதிய ஊடகங்களை கலை வெளிப்பாட்டிற்காகத் தெரிவு செய்தீர்கள்?**

ஆரம்பத்தில் ஓவியத்தில் ஆர்வம் கொண்ட போதும் நான் உருவம் என்ற ஒன்று வரவேண்டும் என்பதற்காக எனது படைப்பில் உருவத்தைக் கொண்டு வந்தேன். ஆனால் எனக்கு உருவத்தை மறைத்து காட்சி மூலம் வெளிப்படுத்துவதில் ஆர்வம் அதிகமாக இருந்தது. மேலும் புதிய உள்ளடக்கத்தில் காட்சியை வெளிப்படுத்துவதில் இருந்த ஆர்வத்தினாலும் நான் புதிய ஊடகங்களை எனது களைக்காக தெரிவு செய்தேன்.

> **சுயம் என்றது சமூகத்தால் கட்டமைக்கப்படுது. அதாவது சமூகம் என்பது இங்கு செல்வாக்கு செலுத்துகின்றது. சமூகம் என்பது இங்கு செல்வாக்கு செலுத்துகின்றது. படைப்பினுடு சுயத்தை வெளிப்படுத்தல் என்பது நனவிலியைச் சிறைப்பிடிப்பதாக அமைந்தது.**

**இந்த காண்பிய காட்சிப்படுத்தலுக்கான தொழில்நுட்பம் பற்றிய உங்கள் அனுபவம் யாது?**

புதிய கலை ஊடகம் செய்கின்ற நேரத்தில் அது கிடைக்கக்கூடிய ஊடகங்கள் சுலபமாக இருந்தது. கணினியை பயன்படுத்துவதற்கு அதிக சுதந்திரம் இருந்தது. அதனால் என்னால் தன்னிச்சையாக செயல்படக் கூடியதாக இருந்தது. அதாவது கணினியை பயன்படுத்துவதற்கு குடும்பத்தினரின் தடை என்பது காணப்படவில்லை. ஆகவே இதில் எனக்கு ஆர்வம் அதிகமாக இருந்தது. தொழில்நுட்ப அறிவினையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இருந்தது. அதே நேரத்தில் NVQ தரத்திலாலான சான்றிதழ் இருக்க வேண்டும் என்பதற்காக உயர்தர கல்வி முடிந்த பின் தொழில்நுட்பம் படிப்பதற்காக சென்று பல விடயங்களைப் பற்றி அறிந்து கொண்டேன். அங்கு

சென்று வந்து முதலாவதாக எனது

> **நாங்கள் சொல்ல வருகின்ற விடயம் சார்ந்து தேவையான தொழில்நுட்பங்களை மாத்திரம் சொல்ல வருகின்ற கருத்து தெரிவிப்பிற்கும் தொழில்நுட்பத்திற்கும் இடையில் சரியான சமநிலை பேணப்படுகின்றது.**
> **ஊடாட்ட கலையில் ஒலி மற்றும் ஒளி என்பதனை இணைக்கின்ற நேரம் ஒலி சார்ந்து பொருத்தப்பாடு காட்டுவது என்பது தெரிய வருகின்றது.**
> **ஊடக செயற்பாடுகள் மேடை நிகழ்வுகளில் வெளிநாடுகளிலும் சமகாலத்தில் செய்யப்படுகின்றது.**

டிஜிட்டல் கலை வேலை செய்தேன் அதுதான். அது தான் Floating, single channel Video, 00:00:26>2012 எனும் வேலையாகும்.

Powr DIRECTOR software, premier Por, Fl studio, Adobe Audition, Abelton என்பவற்றை தேவைக்கேற்ற மாதிரி பாவிக்கின்றேன். இந்த வேலையில் இருந்து இன்னொரு கட்டத்திற்கு பார்வையாளர்களை கொண்டு செல்வதற்கும், அது மட்டுமல்லாமல் சுவைஞர்களை இன்னும் ஈர்க்க வைப்பதற்க்கும் (sensor gaming sensor) பாவித்து touch designer ablton இந்த மாதிரி software தெரிந்துபடித்து sensor வாங்கி sensor gaming ல் இருக்கும் விடயங்களுக்கு இதனை பயன்படுத்தி ஊடாட்டக் கலையில் கொண்டு வந்து பரீட்சித்துப் பார்த்தேன்.

ஒரு sensor என்னுடைய அறை நண்பர் ஒருவர் வைத்து வேறு வேலை செய்தார். எனக்கு ஊடாட்டத்துடன் சம்பந்தம் செய்வதற்காக அது தேவைப்பட்டது. அதற்காக வேறு வேண்டுவதற்காக சென்று அது தேட வேண்டி ஏற்பட்டது. அந்த தொழில்நுட்பம் தான் driversoftw are. இந்த மென்பொருள் sensor இனை கணினியை தொடர்பு கொள்ள வைக்க மென்பொருளை அறிந்து கொண்டு அதனை நிறுவி ஊடக கலை செயல்முறைப்படுத்த ஊடாட்டம் இருக்கின்றதா என்று பார்த்து அதனை Resolume Renal இந்த மாதிரியான மென்பொருளை ஊடக கலையில் பயன்படுத்துவதை அறிந்து கொண்டு அந்த மென்பொருளை தரவு இறக்கி எனக்கு தேவையான விடயத்தை நான் யூடியூபில் உதவியுடன் கற்றுக் கொள்கிறேன்.

தொழில்நுட்பம் மற்றும் கலைக்கிடையிலான சமநிலையை பேணுவதிலும் அக்கறை கொள்கிறேன். தொழில்நுட்பம் கலைக்கு மேலே நிற்கக்கூடாது மற்றும் கலை தொழில்நுட்பத்திற்கு மேலே நிக்காமல் ஊடக கலையை செய்யும் போது வெறுமனவே தொழில்நுட்பம் சார்ந்த விநோதங்களுக்கு மட்டும் கவனம் செலுத்துவதை நோக்கமாக நான் கொள்ளவில்லை.

அதற்கு அப்பால் நாங்கள் சொல்ல வருகின்ற விடயம் சார்ந்து தேவையான தொழில்நுட்பங்களை மாத்திரம் சொல்ல வருகின்ற கருத்து தெரிவிப்பிற்கும் தொழில்நுட்பத்திற்கும் இடையில் சரியான சமநிலை பேணப்படுகின்றது.

ஊடாட்ட கலையில் ஒலி மற்றும் ஒளி என்பதனை இணைக்கின்ற நேரம் ஒலி சார்ந்து பொருத்தப்பாடு காட்டுவது என்பது தெரிய வருகின்றது. இரண்டு மென்பொருட்களுக்கு இடையில் தொடர்பு இருக்க வேண்டும். அப்போது எல்லா மென்பொருளும் touch designer ஒட இணைந்து வேலை செய்யக்கூடிய நல்ல மென்பொருள் Abelton. ஒளி மற்றும் சத்தம் வேலை செய்ய Ableton touch designer ஒட சேர்ந்து கூடாது என்ற வேலை செய்து கொண்டிருக்கும் போது அதற்காகத்தான, Abelton என்ற software தெரிந்து கொள்கிறேன். ஒலி சார்ந்து வேலை செய்தாலும் Ableton touch design software தொடர்பாடல் செய்வதன் மூலம் தாமதப்படுத்தியதாக இருந்தது.

உதாரணமாக கை உயர்த்தினால் “sensor கை உயர்த்தினார்” என்று Touch designer இடம் கூறும். Touch designer கையை உயர்த்தப்பட்டது பாட்டு போடச் சொல்லி ablton இடம் கூறும்.

கணப்பொழுதில் இந்த ஊடக வேலைக்கு ஒரு குறிப்பிட்ட கணப்பொழுதில் ஈடுபாடு மென்பொருட்களை ஒன்றை வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் ஊடாட்ட செயற்பாட்டு கூடாக நான் பயன்படுத்தினேன். இந்த ஊடக செயற்பாடுகள் மேடை நிகழ்வுகளில் வெளிநாடுகளிலும் சமகாலத்தில் ஊடாட்டம் செய்யப்படுகின்றது.

**உங்கள் படைப்புகளின் உள்ளடக்கமாக எது அமைந்துள்ளது? சுயம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?**

ஆரம்பத்தில் ஓவியம் செய்த காலம் வேறு. ஆனால் உயர் தரத்தில் கல்வி கற்கும் போது தான் சுயம் என்பதனை எனது படைப்பில் ஆரம்பித்தேன். ஏனென்றால் மற்றவர்களது படைப்பினை மாதிரி செய்தல் போன்ற அமைப்பினை விடுத்து சுயம் என்பதனை கொண்டு வந்தேன். சொல்ல முடியாத விடயத்தினை படம் மூலம் வெளிப்படுத்தினேன். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றபோது மீயதார்த்த வாதம், வெளிப்பாட்டு வாதம் போன்ற தனிப்பட்ட வரலாறுடன் மெலிந்த உடலை சரி மாதிரி கீறி உடம்பு என்பது பாகமாக வைத்து உருவாக்கியுள்ளேன்.

பல்கலைக்கழகத்தில் தரப்படும் செயற்பாடுகளில் மனித உருவினை தவிர்த்தேன்.

எனக்கு மனித ஒருவின்மீது விருப்பம் இருந்தது. ஆனால் புதிதாக உருவாக்க வேண்டும் என்பதற்காக அதை தவிர்த்தேன். கொஞ்ச காலம் போன பிறகு எனக்கு படம் வரைவதை விட போட்டோ மற்றும் வீடியோ இதில் ஆர்வம் கூடியது. கட்டி முடிக்கப்படாத கட்டிடம் மற்றும் காய வைக்கப்பட்ட ஆடைகள் கொடியில் எப்படி தொங்குதோ அதை பார்த்து அதை போட்டோ எடுப்பன்.

ஆடையோடு எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. இதன் மூலம் சுயம் என்றதை காட்ட முயல்கிறேன். ஆன்மாவை தூய்மைப்படுத்துவது மாதிரி உடைகள் தூய்மையாக்கப்பட்ட ஆன்மா என்ற ஓவியங்கள் சில உள்ளடக்கமாகவும் எடுத்து இருக்கிறேன். உதாரணமா ஒரு ஆள் முன்னுக்கு நிர்வாணமா இருக்கிறார். அவருக்கு பின்னால் உடுப்பு வந்து தொங்குதல் இவ்வாறான உள்ளடக்கம் எனது பதிப்பில் (Print) உள்ளது.

எனது சுயம் என்றது சமூகத்தால் கட்டமைக்கப்படுது. அதாவது சமூகம் என்பது இங்கு செல்வாக்கு செலுத்துகின்றது. 2016 ஆம் ஆண்டு நித்திரையின் போது படுக்கை விரிப்பின் உருமாற்றம் எப்படி இருக்கும் என்பதில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. அதை நான் சலனப்படமாகப் பதிவு எனது தொலைபேசியின் மூலமே இதனை பதிவு செய்தேன். ஏன் இந்த படுக்க விரிப்பு மாற்றம் ஆகுது? என்ற கேள்விகளுக்கு விடை தேடும் போது உடல் அசைவு தான் என்பதனை புரிந்து கொண்டேன். நித்திரையில் அந்த அசைவு எனது நனவிலியால் தீர்மானிக்கப்படவதாக விளங்கிக்கொண்டேன். இதனூடு சுயத்துக்கும் நனவிலிக்குமான தொடர்பை இனங்கண்டேன். படைப்பினுடு சுயத்தை வெளிப்படுத்தல் என்பது நனவிலியைச் சிறைப்பிடிப்பதாக அமைந்தது.

**பார்வையாளர்கள் இக்கலையினை எவ்வாறு பார்வையிட்டார்கள்?**

பார்வையாளர்கள் இதனை புதிய அனுபவமாக பார்க்கின்றார்கள். அவர்கள் எனது கலையுடன் சேர்ந்து ஊடாடுவதனால் பார்வையாளர்களுக்கு பிடித்த ஒன்றாக காணப்படுகின்றது. இந்த படைப்புகளை விளங்கிக் கொள்வது என்றது பார்வையாளர்களுக்கு மிகவும் கஸ்டமான விடயமாக இருந்தது.

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்திய இலங்கை



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், தம்புள்ளயில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 162/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க 54 (49), குசல் மென்டிஸ் 26 (25), குசல் பெரேரா 24 (16), கமிந்து மென்டிஸ் 19 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: றொமாரியோ ஷெப்பர்ட் 2/23 [3], அல்ஸாரி ஜோசப் 1/33 [4], குடகேஷ் மோட்டி 0/13 [4], றொஸ்டன் சேஸ் 0/24 [4])

மே. தீவுகள்: 89/10 (16.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: றொவ்மன் பவல் 20 (17), அல்ஸாரி ஜோசப் 16 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: டுனித் வெல்லலாகே 3/9 [4], சரித் அசலங்க 2/6 [2], மகேஷ் தீக்‌ஷன 2/7 [3.1], மதீஷ பத்திரண 1/12 [2])

போட்டியின் நாயகன்: பதும் நிஸங்க

இத்தொடரின் முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்ற நிலையில், தீர்மானமிக்க மூன்றாவது போட்டியானது இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கம்

## சம்பியனான மிஜ்வாத்



■ எம்.எஸ்.எம். ஸாகிர்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் ஏ.எஸ்.ஏ. மிஜ்வாத் சம்பியனானார்.

மாலபே ராகுல பெண்கள் பாடசாலையில் சனிக்கிழமை (12) முதல் திங்கட்கிழமை (14) வரை நடைபெற்ற இப்போட்டியில் மிஜ்வாத் முதலாமவராக விளையாடி தான் கலந்து கொண்ட ஆறு போட்டிகளில் 5.5 புள்ளிகளைப் பெற்று (5 வெற்றிகள், 1 சமநிலை) சம்பியனாகியுள்ளார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்கும், அவர்களுக்குப் பயிற்சியளித்து தயார்படுத்தி அழைத்துச் சென்ற கல்லூரியின் சதுரங்கப் பயிற்றுவிப்பாளர் எஸ்.எம். சுஹ்தான் மற்றும் கல்லூரியின் சதுரங்க பொறுப்பாசிரியர் எம்.வை.எம். றகீப் ஆகியோருக்கும் அதிபர் எம்.ஐ. ஜாபிர் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

நசும் அஹ்மட் மீது தாக்குதல்

## நீக்கப்பட்ட பங்களாதேஷ் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ஹத்துருசிங்க



சர்வதேச கிரிக்கெட் சபையின் 2023ஆம் ஆண்டு ஒருநாள் சர்வதேசப் போட்டி உலகக் கிண்ணத் தொடரின்போது நசும் அஹ்மட்டைத் தாக்கியதாகக் கூறப்படுவது தொடர்பாக பங்களாதேஷின் கிரிக்கெட் சபையால் அந்நாட்டின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் சந்திக ஹத்துருசிங்க நீக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் வரையில் பங்களாதேஷின் இடைக்கால தலைமைப் பயிற்றுவிப்பாளராக மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பில் சொமொன்ஸ் நியமிக்கப்பட்டமையையும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

கற்பிட்டி கொய்யாவாடி அரபா நகர் பாடசாலைக்கு

## விளையாட்டு சீருடை வழங்கி வைப்பு

■ எம்.யூ.எம். சனூன்

கற்பிட்டி கொய்யாவாடி அரபா நகர் பாடசாலைக்கு ஆசிரியர் எம்.ஏ.எம். றினூஸானின் வேண்டுகோளுக்கிணங்க கற்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.எம். நாசீம் மற்றும் அவரின் சகோதரரின் நிதி உதவியின் மூலம் விளையாட்டு சீருடை அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.



இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## பலமான நிலையில் பாகிஸ்தான்

இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் பலமான நிலையில் பாகிஸ்தான் காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முல்தானில் செவ்வாய்க்கிழமை (15) ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பாகிஸ்தான், மொஹமட் றிஸ்வானை 41 ஓட்டங்களுடன் பிறைடன் கார்ஸிடம் ஆரம்பத்திலேயே இழந்தது.

பின்னர் சல்மான் அக்ஹா 31 ஓட்டங்களுடன் மத்தியூ பொட்ஸிடம் வீழ்ந்ததுடன், அடுத்து வந்த சஜிட் கானும் உடனேயே ஜேக் லீச்சிடம் வீழ்ந்தார். தொடர்ந்து 37 ஓட்டங்களுடன் கார்ஸிடம் ஆமிர் ஜமால் வீழ்ந்ததுடன், நோமன்



அலி 32 ஓட்டங்களுடன் லீச்சிடம் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 366 ஓட்டங்களை பாகிஸ்தான் பெற்றது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து குறிப்பிட்ட நேரத்தில் ஸக் குறோலியை அலியிடம் இழந்தது. பின்னர் ஒலி போப் 29 ஓட்டங்களுடன் கானிடம் வீழ்ந்தார். அதைத் தொடர்ந்து ஜோ றூட் 34 ஓட்டங்களுடன் கானிடம் வீழ்ந்ததோடு, சிறிது நேரத்திலேயே 114 ஓட்டங்களைப் பெற்ற பென் டக்கெட், ஹரி ப்றூக், அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் கானிடம் வீழ்ந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 239 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றுள்ளது.

தற்போது களத்தில் ஜேமி ஸ்மித் 12 ஓட்டங்களுடனும், கார்ஸ் இரண்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

இஸ்ரேலுக்கு அமெரிக்கா

காசா

## காலக்கெடு



சாவில் மனிதாபிமான உதவிகளை அதிகரிப்பதற்கு 30 நாள்கள் கால அவகாசம் வழங்கியுள்ள அமெரிக்கா, அவ்வாறு இல்லையெனில் இஸ்ரேலுக்கான சில அமெரிக்க இராணுவ உதவிகள் நிறுத்தப்படும் என, இஸ்ரேலுக்கு எழுத்துமூலம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (13) அனுப்பப்பட்ட கடிதத்தில் மேலும் குறிப்பிடப்படுள்ளதாவது,

வடக்கு காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திவருவதாகவும் இந்த தாக்குதல் ஏராளமான பொதுமக்கள் உயிரிழப்புகளை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசமான மனிதாபிமான நிலைமை குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. கடந்த மாதம் வடக்கு மற்றும் தெற்கு காசா பகுதிகளில் கிட்டத்தட்ட 90 சதவீதமான மனிதாபிமான இயக்கங்களை இஸ்ரேல் நிராகரித்தது அல்லது தடை செய்தது என்றும், அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய அதிகாரி இது குறித்து கூறுகையில், “இஸ்ரேல் கடிதத்தை மறுஆய்வு செய்து வருகிறது, இந்த விடயத்தை தீவிரமாக ஆலோசித்து வருகிறோம். அமெரிக்க சாடியுள்ள குற்றச்சாட்டுகளை நிவர்த்தி செய்ய விரும்புகிறோம்” எனக் கூறினார்.

வடக்கில் ஹமாஸ் செயற்பாட்டாளர்களை குறிவைப்பதாகவும் மனிதாபிமான உதவிகளை நிறுத்தவில்லை என்றும் இஸ்ரேல் முன்னர் கூறியுள்ளது.

வட கொரியா

இராணுவத்தில் இணைய

## ஒரு மில்லியன் இளைஞர்கள் ஆர்வம்



இந்த வாரத்தில் மாத்திரம், ஒரு மில்லியனுக்கும் அதிகமான இளைஞர்கள் இராணுவத்தில் சேர அல்லது மீண்டும் இணைய கையொப்பமிட்டுள்ளதாக, வட கொரியா தெரிவித்துள்ளது.

அத்துடன், தென் கொரியா - பியாங்யாங் பகுதிக்கு ஆளில்லா விமானங்களை அனுப்பியதாகவும், அப்பகுதி எல்லை வீதிகளை தகர்ப்பதாகவும் வட கொரியா குற்றம் சாட்டியுள்ளது.

உத்தியோகபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் (KCNA) புதன்கிழமை (16) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 1.4 மில்லியன் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் யூத் லீக் அதிகாரிகள் உட்பட பலர், இராணுவத்தில் இணைவதற்கான மனுவில் கையெழுத்திட்டுள்ளதாகவும், அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் ஊடகங்களுக்கு

## தாலிபானின் புதிய உத்தரவு

உயிர் கொண்டு அசையும் எந்தவொரு புகைப்படங்களையும் செய்தி ஊடகங்களில் வெளியிடக்கூடாது என்ற உத்தரவு, ஆப்கானிஸ்தானில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் இருந்து ஆப்கானிஸ்தானில் நடந்து வரும் தாலிபான் ஆட்சியில், இஸ்லாம் மதத்தின் ஷரியத் சட்டத்தின் பெயரால் மக்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகிறது.

பொது இடங்களில் நடமாடுவது, பண்டிகை கொண்டாட்டங்கள், ஆண்கள் சவரம் செய்வது வரை அனைத்துக்கும் தனித்தனி விதிகள் உள்ளன.

குறிப்பாக பெண்களுக்கு உடை சுதந்திரம், கல்வி, சமூக வாழ்க்கை என அனைத்தும் மறுக்கப்பட்ட அவலமான சூழலே அங்கு நிலவுகிறது. 2021ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்த பின்னர், தலைநகர் காபூலில் உள்ள மகளிர் அமைச்சகம் அறநெறி அமைச்சகமாக மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஜம்மு காஷ்மீர்


ஜம்மு காஷ்மீரில்

## 10 வருடங்களின் பின் ஜனாதிபதி ஆட்சி

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், 10 வருடங்களின் பின்னர் ஜனாதிபதி ஆட்சி திரும்பப்பெறப்பட்டு, உமர் அப்துல்லா தலைமையிலான என்சிபி அரசு, புதன்கிழமை (16) ஆட்சியமைத்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள 90 தொகுதிகளுக்கு மூன்று கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

ஜம்மு காஷ்மீர் சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் அக்டோபர் 8ஆம் திகதி எண்ணப்பட்டன. இதில் பெரும்பான்மை இடங்களை



பிடித்து தேசிய மாநாடு கட்சி 42 இடங்களிலும், காங்கிரஸ் 6 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இதற்கிடையே 4 சுயேட்சைகள் மற்றும் 1 இடத்தில் வென்ற ஆம் ஆத்மி என்சிபி கட்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, ஜனாதிபதி ஆட்சி திரும்பப்பெறப்பட்டு உமர் அப்துல்லா தலைமையிலான என்சிபி அரசு புதன்கிழமை (16) ஆட்சியமைத்துள்ளது.

ஸ்ரீநகரில் உள்ள சேர்-இ-காஷ்மீர் இன்டர்நேஷனல் கான்வென்டின் சென்டர் (SKICC) இல் வைத்து நேற்று புதன்கிழமை காலை 11.30 மணியளவில் பதவியேற்பு விழா நடைபெற்றது.

ஜம்மு காஷ்மீரில் 10 வருடங்களுக்கு பிறகு அரசு அமைத்துள்ளது. உமர் அப்துல்லாவை தொடர்ந்து மற்ற அமைச்சர்களும் பதவி ஏற்கவுள்ளனர்.


முன்பதிவு செய்யாமல் வரும் பக்தர்களுக்கு

## சபரிமலையில் தரிசனம் செய்ய அனுமதி

ஒன்லைனில் முன்பதிவு செய்யாமல் வரும் ஐயப்ப பக்தர்களுக்கும் சபரிமலையில் தரிசனத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்று, மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்தார்.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல, மகர விளக்கு தரிசனத்தையொட்டி, அடுத்த மாதம், அடுத்த மாதம் 15ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடை திறக்கப்படவுள்ளது.

டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி மண்டல பூஜையும், வருகிற



ஜனவரி மாதம் 14ஆம் திகதி மகர விளக்கு பூஜையும் நடைபெறும்.

நடப்பு பூசையை முன்னிட்டு, உடனடி முன்பதிவு வசதி இரத்து செய்யப்பட்டு ஒன்லைன் முன்பதிவு அடிப்படையில் மட்டும் தினசரி 80 ஆயிரம் பக்தர்களை தரிசனத்துக்கு அனுமதிக்க கடந்த 5ஆம் திகதி முதல் மந்திரி பினராயி விஜயன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு, பந்தளம் அரச கும்பத்தினர், இந்து அமைப்புகள், ஐயப்பா சேவா சங்கங்கள் சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. உடனடி தரிசன வசதியை கடந்த ஆண்டை போல் நடைமுறைப்படுத்த அரசாங்கத்துக்கு இந்த அமைப்புகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை (15), சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது பேசிய மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், ஒன்லைனில் முன்பதிவு செய்யாமல் வரும் ஐயப்ப பக்தர்களுக்கும் மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் சபரிமலையில் தரிசனத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 17, ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.